பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 21 ஞாயிற்றுக்கிழமை 06.09.2020 கதிர் 301

**இனி இது ரகசியம் அல்ல!**

“ஆழமாக – ஆற அமர – யோசிகத்துத்தான் நான் நியமனங்களைச் செய்கிறேன். அவற்றை மாற்றும்படி அழுத்தம் தராதீர்கள்!” – என்று ஜனாதிபதி கோட்டாபய ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிப்புக் காரணம் என்ன என்று பக்கம்02 »

# ஒற்றுமையாகவே நாம் நிற்கிறோம்!



## சுமந்திரனின் நன்றி தெரிவிப்பு நிகழ்வில் தமிழரசுத் தலைவர் மாவை திட்டவட்டம்

**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம், செப். 06**

**தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் எழுந்த விமர்சனங்களை தூக்கி வைத்துவிட்டு இனத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு தீவிரமாகச் செயல்படவேண்டும். அதனை நாம் செய்வோம் என்பதன் அறிகுறியாகவே நான் இங்கு வந்து இன்றைய நிகழ்வில் இந்தக் கருத்தை முன்வைக்கின்றேன்.**

**– இவ்வாறு நேற்று மாலை சிறுப்பிட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏற்பாடு செய்த நன்றி தெரிவிப்பு நிகழ்வில் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.**

பக்கம் 02 »

## கிழக்கு மாகாணத்தை குறி வைக்கும் பஸில்!

கொழும்பு, செப். 06

மாகாணசபைத்தேர்தலில் கிழக்கு மாகாணத்தையும் கைப்பற்றப் போவதாக சபதமெடுத்துள்ள பஸில் ராஜபக்ஷ அதற்கான வியூகங்களை தற்போதிருந்தே வகுக்க ஆரம்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கி குறுகிய காலப்பகுதிக்குள் மூன்று தேர்தல்களிலும் ‘ஹட்ரிக்’ சாதனை புரிந்த பஸிலிடமே மாகாண தேர்தலையும் வழிநடத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய 7 மாகாணசபைகளையும் இலகுவில் வென்றுவிடலாம் என கணக்கு பக்கம் 02 »

## குட்டிமணியின் துணைவியார் காலமானார்!



யாழ்ப்பாணம், செப் 06

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஸ்தாபகர்களில் ஒருவரான குட்டிமணியின் பாரியார் இராசரூபராணி காலமானார்.

இந்த துயரச் செய்தி அறிந்து தாம் வேதனையடைகின்றோம் என ரெலோ தெரிவித்துள்ளது.

இது பக்கம் 02 »

## பட்டதாரிகளுக்கு படைப் பயிற்சியா?

### பௌத்த பிக்கு போர்க்கொடி



கொழும்பு, செப். 06

அரச சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் இராணுவப் பயிற்சிக்கு மாறாக முறையாக அரச நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பாகப் பயிற்சிகளை வழங்குமாறு பக்கம் 02 »

## சிறப்புத் தூதுவர் மூலம் ‘13’ ஐ கையாள இந்திய அரசு முடிவு?

இலங்கையின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசு புதிய அரசமைப்பை உருவாக்கவுள்ள நிலையில், அதில் மாகாண சபைகளின் நிலை குறித்து ஆராய்வதற்காக இந்தியாவுடன் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுகளை நடத்த ஆளும் தரப்பு தயாராகி வருகின்றது.

இந்தியாவின் சிறப்புத் தூதவர் ஒருவர் இந்த விடயங்களைக் கையாளவும் நியமிக்கப்படவுள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது என சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் சுயாதீன வட்டாரங்கள் மூலம் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

தற்போது நடைமுறையில் உள்ள 1978ஆம் ஆண்டு அரசமைப்பு 19 தடவைகள் திருத்தப்பட்டுள்ள நிலையில், பக்கம் 02 »

## கனடா வீதி விபத்தில் இரு தமிழர்கள் சாவு

கனடாவில் ஏற்பட்ட வீதி விபத்தில் இரண்டு தமிழர்கள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒண்டாரியோவின் Blue Mountains நகரில் நேற்றிரவு இந்த விபத்து பக்கம் 02 »

## மோடியுடன் பேச கூட்டமைப்பு முயற்சி

கொழும்பு, செப். 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கான இந்தியத் தூதுவரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பக்கம் 02 »

## அமெரிக்காவுக்கான தூதுவராக ரவிநாத்



கொழும்பு, செப். 06

அமெரிக்காவுக்கான தூதுவராக ரவிநாத் ஆரிய சிங்க நியமிக்கப்படவுள்ளார். இவர் பிரான்ஸ் நாட்டுக்கான தூதுவராக நியமிக்க ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தார்.

அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக கடமை பக்கம் 02 »

## மணிவண்ணனின் தலைமையில் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை



யாழ்ப்பாணம், செப்.06

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த சட்டத்தரணி மணிவண்ணன் தலைமையில் தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பக்கம் 11 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் ஒரு புறம் எனக்குத் தெரிந்த செய்தி வட்டாரங்களில் தேட, என் நண்பரான தென்னிலங்கை சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் அதே விடயத்துக்காக என்னைக் குடைய முற்பட்டார். எனக்கு முதலில் விடயம் விளங்கவில்லை. என்ன வென்று கேட்டேன்.

*“என்ன பத்திரிகையாளர் நீர்...? நீரே நேரடியாகத் தேடி எடுக்க வேண்டிய விடயமல்லவா அது...?”* – என்று இழுத்தார் அவர்.

*“அந்த அறிவிப்பு வெளியாள்களுக்கு என்பதற்கு முதல், வீட்டுக்குள் விடுக்கப்பட்ட அறிவிப்பாம். விடயத்தை ‘செக்’ பண்ணி அறியக் கூடிய செய்தி வட்டாரங்களில் நீரும் ஒருவர் என்பதால் உம் காதிலும் போட்டு வைக்கிறேன். தேடிப் பாரும்...!”* – என்றார் அவர். நான் தேடித் துளாவினேன்.

அவர் சொன்னது சரிதான். தடல்புடலாக ஜனாதிபதி கோட்டாபய கொடுக்கும் நியமனங்கள் பொதுஜன பெரமுனவுக் குள் கட்சித் தலைவரும், மூத்த சகோதரரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவில் தொடங்கி பலருக்கும் அதிருப்தியைத் தந்துள்ளன என்பது உண்மைதான்.

அமெரிக்காவின் லொஸ்ஏஜென்ஸில் தாம் தங்கியிருந்த போது தமக்கு நண்பர்களாக இருந்த பலருக்கும் இராஜதந்திரத் தூதுவர் பதவிகளை வாரிக் கொட்டியிருக்கின்றார் கோட்டா.

இப்போது கடைசியில் சிக்கலில் வந்து சிக்கியிருக்கின்றது புதுடில்லிக்கான தூதுவராக மிலிந்த மொறகொடவை நியமித்த விவகாரம்.

மிலிந்த மொறகொடவின் துணைவி–யார் ஒரு கிறிஸ்தவர். தமது சுற்றாடலில் உள்ள ஒரு விஹாரையில் மணி ஒலிப்பதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராக தேரர்கள் பலர் ஒரே சமயத்தில் எதிர்ப்புணர்வை கிளப்பியிருக்கின்றனர். அவருக்கு அமைச்சரவை அந்தஸ்தோடு இந்தியாவுக்கான தூதுவர் பதவி வழங்கப்படுவதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அடியோடு விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்தியாவே அவர் புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படுகின்றமையை விரும்புமா என்று கேள்வி எழுப்பப்படுகின்றது.

அவரது பெயரை கொழும்பு புதுடில்லிக்கு பரிந்துரைத்து நாள்களாகி விட்டன. ஆனாலும் புதுடில்லி இன்னும் பச்சைக் கொடி காட்டவில்லை என்று தகவல்.

மிலிந்த மொறகொட ‘பாத்பைண்டர்’ என்ற பெயரில் ஓர் அரச சார்பற்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகின்றார். அதற்கான முழு நிதி உதவித்திட்டத்தின் மூலமும் சீனாதான் என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன. அப்படி சீனத் தொடர்பு உள்ளவர் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்படுவதில் புதுடில்லி அரசியல் தலைமைக்கு உடன்பாடு இருக்காது என இராஜதந்திர வட்டாரங்களில் குசுகுசுக்கப்படுகின்றது.

மிலிந்த மொறகொட நியமனம் உட்பட பல விடயங்களில் மஹிந்தரின் சொல் எடுபடவில்லை என்று பேச்சு.

அதன் எதிரொலிப்புக்களை அடுத்தே *“என் நியமனங்களை மாற்றும்படி கோரி முயற்சி எடுக்காதீர்கள்!”* – என்ற பொதுவான அறிக்கை ஜனாதிபதி தரப்பிலிருந்து வெளியானது எனக் கூறப்படுகின்றது.

தம்பியின் சமிக்ஞையை அண்ணன் புரிந்து கொள்ள மாட்டாரா... என்ன...?

★ ★ ★

அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றும் விடயத்தில் ஆளும் தரப்புக்குள் முரண்பாடு இருந்தாலும், அதையும் மீறி நாம் உதவி, அரசுத் தரப்பைக் காப்பாறுவோம் என்று எதிரணித் தரப்பில் சில பிரமுகர்கள் – பிரகிருதிகள் – புறப்பட்டிருக்கின்றனர் என்று தகவல்.

இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்களை ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தடுக்கும் அரசமைப்புத் திருத்தத்தின் 19ஆவது பிரிவை இப்போது 20ஆவது திருத்தம் மூலம் நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது.

அதனை அமைச்சரவையிலேயே வாசுதேவ நாணயக்கார எதிர்த்துள்ளார். விமல் வீரவன்ஸ, சு.கவின் விதுர விக்கிரமநாயக்கா போன்றோரும் அந்தச் சரத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஆனால், அந்தச் சரத்துக்குத் தாங்கள் ஆதரவு என்று எதிரணியில் மனோ கணேசனும், ரவூப் ஹக்கீமும் கூறியிருக்கின்றனராம். நல்லாட்சி அரசில் இவர்களும் சேர்ந்துதான் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் பிரிவுகளைக் கொண்டு வந்தனர். இப்போது மாறிப் பேசுவதன் மர்மம் விளங்கவில்லை.

இதேநேரம் எதிரணியில் இருக்கும் எம்.பிக்களை அரசுத் தரப்பிற்கு இழுப்பதற்கான வலை வீச்சு ஆரம்பமாகியிருக்கின்றதாகத் தகவல். ரிஷாத் அதற்கு அடியோடு மறுத்து விட்டார். ஆனால் அவருடைய கட்சியைச் சேர்ந்த மற்றிருவரை இழுக்கும் வேலை புதிய நீதி அமைச்சரான அலி சப்றியிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தகவல். பேச்சுக்கள் ஆரம்பமாகி விட்டன. குத்துக்கரணங்கள், பல்டிகள் எப்போது...? விரைவில் தெரியும். காத்திருப்போம்....!

–மின்னல்–

## குட்டிமணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று விடுத்துள்ள இரங்கல் செய்தியில் –

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகராக எமது இயக்கத்தின் முதுகெலும்பாகச் செயற்பட்டவர் குட்டிமணி. அவரின் பாரியார் இராசரூபராணி இயற்கை எய்திய துயரச் செய்தி அறிந்து நாம் வேதனையடைகின்றோம்.

இவரது துணைவியாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் சார்பாகவும் எமது ஆழ்ந்த இரங்கல்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என்றுள்ளது.

## கிழக்கு மாகாணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டுள்ள பஸில் ராஜபக்ஷ, எப்படியாவது கிழக்கிலும் மொட்டு மலரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்.

இதற்காகமக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை அவர் குறி வைத்துள்ளார். சில வேளை முஸ்லிம் காங்கிரஸ் உட்பட கிழக்கிலுள்ள சில கட்சிகளின் முக்கிய புள்ளிகளை அவர் வளைத்துபோடக்கூடும் என நம்பப்படுகின்றது. மத்தியில் ஆட்சி அதிகாரம் ராஜபக்ஷக்கள் வசம் இருப்பதால் பஸிலின் விரித்த வலையில் அவர்கள் இலகுவில் சிக்கக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

மறுபுறத்தில்கருணா, பிள்ளையான் அணிகள் தனித்து களமிறங்கினால்கூட மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சங்கமிக்ககூடும். அதாவுல்லாவின் தேசிய காங்கிரசும் ராஜபக்ஷ அணியுடனேயே அரசியல் பயணம் செய்கின்றது.

கிழக்கில் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் சங்கமித்தால் ஆட்சியமைப்பதில் நெருக்கடி ஏற்படலாம் என்பதால் இரு அணிகளையும் கூறுபோடும் தந்திரோபாய அரசியல் நகர்வுகளும் இடம் பெற்றுவருகின்றன.

## அமெரிக்காவுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிய ரொட்னி பெர்னாண்டோ இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்து வரும் பிரான்ஸ் நாட்டுக்கான இலங்கை தூதுவராக பேராசிரியர் கஷ்னிகா ஹிரிம்புரேகம நியமிக்கப்படவுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான இவர், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் பதவிக்கு ஏற்கனவே முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர இத்தாலி, தென் கொரியா, சீசெல்ஸ், ஈரான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான தூதுவர் பதவிகள் வெற்றிடமாக இருந்து வருகின்றன.

அந்த பதவிகளுக்கு தகுதியானவர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

## ஒற்றுமையாகவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிகழ்வில் நேற்று மாவை சேனாதிராசா மாலைமரியாதையுடன் வரவேற்கப்பட்டார். அவரை சுமந்திரனே மாலை சூட்டி வரவேற்றார்.

சுமந்திரனுக்கும் மாவைக்கும் இடையே கடுமையான முரண்பாடு எழுந்துள்ளதாக கடந்த சில தினங்களாகச் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அவை அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் நிகழ்வாக நேற்றைய இந்த நிகழ்வு அமைந்தது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தவை வருமாறு:–

பல தடவைகள் வீழ்ந்து விட்டேன் என்ற போதும், ஏன் கொல்லப்பட்டு விட்டேன் என்றும் பல காலங்களை கழித்திருக்கின்றேன். அவ்வாறான காலங்கள் எல்லாவற்றையும் மீறி எழுந்து வந்திருக்கிறேன். வீழ்த்தப்பட்டான் எனவும் கொல்லப்பட்டார் எனவும் கூறிய நேரத்திலும் முன்னரை விட மிகப் பலமாகவே மக்கள் மத்தில் எழுந்து வந்து மக்களின் விடிவிற்காக என்னை அர்ப்பனித்தேன்.

உலகிலே பெருந் தலைவர்கள் தோல்வி கண்டிருக்கின்றார்கள். ஆட்சியை இழந்திருக்கின்றார்கள். அவர்கள் வரலாற்றில் மீண்டும் பெரு வெற்றியை அடைந்திருக்கின்றார்கள். நாம் ஆட்சி அமைக்கப் போட்டியிடவில்லை. தமிழர்களின் விடுதலைக்காகப் போராடுகின்றவர்கள். இதனைஎண்ணி மதிப்பீடு செய்து வீழ்ந்து கிடக்கவில்லை.

தேர்தல் மட்டும் ஓர் இனத்தின் விடுதலையை தீர்மானிப்பதில்லை . அடக்கி ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையை பார்க்கின்றபொழுது அவர்கள் வெற்றி, தோல்வியை அல்ல, எழுந்து போராடுவதனையே வரலாறாகப் பாரத்திருக்கின்றோம். நாடாளுமன்றிலே நிறைவேற்று அதிகார முறையைப் பலப்படுத்த, சர்வாதிகாரத்தை நோக்கி – அதாவது ஜனநாயக பலம் கொண்ட நாட்டிற்குப் பதிலாக இராணுவ பலம்கொண்ட ஒரு நாடாக இந்த நாட்டை மாற்றியமைக்க – முயற்சிப்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அதனை ஏற்க முடியாது. அதற்கு எதிராக இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியுள்ளோம்.

இருபதாம் திருத்தத்திற்கும் அப்பால் புதிய அரசமைப்பையும் உருவாக்க வேண்டும் என்று ஒரு பிரேரணையை முன் வைக்கின்றார்கள். இவை இரண்டிலும் நாம் முக்கிய கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்த சர்வாதிகார ஆட்சி முறையை எதிர்க்க வேண்டும். இதற்கு தமிழ் மக்கள் ஒன்று பட்டு நிற்கும் தீவிர முயற்சியை நாம் எடுக்க வேண்டும். நாடு முழுவதும் ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இதில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரகள் , முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் நாடாளுமன்றில் ஒன்றுபட்டு நிற்கும் நிலமையை அடைந்தே ஆக வேண்டும்.

இவற்றை அடைய எங்கள் மக்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இதனைவிட எமது கட்சிக்குள் – அதாவது தமிழ் அரசுக் கட்சிக்குள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் – எழுந்த விமர்சனங்களைத் தூக்கி வைத்துவிட்டு இனத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு தீவிரமாகச் செயல்பட வேண்டும். அதனை நாம் செய்வோம் என்பதன் அறிகுறியாகவே நான் இங்கே வந்து இந்தக் கருத்தை முன் வைக்கின்றேன். – என்றார்.

## மோடியுடன் பேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை டில்லிக்கு அழைத்துப் பேச்சு நடத்துவதற்கு பிரதமர் மோடி, முன்னர் இலங்கை வந்திருந்தபோது விருப்பம் வெளியிட்டிருந்தார். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றாலும் பின்னர் பயணம் பிற்போடப்பட்டது.

எனினும், இந்தியாவின் தலையீட்டுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம், புதிய அரசமைப்பின் ஊடாக மாற்றியமைக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே புதிய அரசமைப்பின் ஊடாக தமிழர்களுக்கான தீர்வை பெறுவதற்கு டில்லியின் தலையீட்டைக் கூட்டமைப்பு கோரவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு டில்லி இராஜதந்திர மட்டத்திலான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

கூட்டமைப்பின் கோரிக்கைக்கு டில்லி தரப்பில் இருந்தும் இன்னும் பச்சைக்கொடி காட்டப்படவில்லை. கொழும்புடனான உறவைக் கருத்திற்கொண்டு கூட்டமைப்புடனான நேரடிச் சந்திப்பை பிரதமர் மோடி தவிர்த்தால்கூட விசேட பிரதிநிதியொருவரை இலங்கைக்கு அனுப்பக்கூடும் எனவும் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது

## சிறப்புத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20ஆவது திருத்தமும் ஒரு சில வாரங்களில் கொண்டுவரப்படவுள்ளது.

இதற்காக குறுகிய கால மாற்றங்கள் மற்றும் நீண்டகால மாற்றங்கள் என்ற அடிப்படையில் அரசமைப்பு வரைவுகளைக் கொண்டுவருவதற்காக உரிய நிபுணர் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் மாகாண சபைகளுக்கு ஆதாரமாகவுள்ள 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான அரசின் நிலைப்பாடுகள் இன்னும் தெளிவாகவில்லை.

அரசிலுள்ள தமிழர் தரப்பினர் 13 ஆவது திருத்தச் சட்டம் அவசியம் எனக் கூறிக்கொண்டுள்ள போதிலும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான சிங்கள அமைச்சர்கள் மாகாண சபை முறைமை அவசியமில்லை என்பதையே கூறி வருகின்றனர்.

இந்தநிலையில், 13ஆவது திருத்தம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடன் ஆளும் தரப்பினர் நடத்திய பேச்சின்போது இது குறித்து சில இராஜதந்திர ரீதியிலான தீர்மானங்களை எடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இந்திய இல்லத்தில் இராப்போசன விருந்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள், இந்த விடயம் குறித்தும் இந்தியத் தூதுவருடன் பேசியுள்ளனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் அரசு கைவைக்க நினைக்கவில்லை எனவும், இது குறித்து தெளிவான நடைமுறைகளை அறியத்தருவதாகவும் இலங்கை தரப்பு வாக்குறுதியளித்துள்ளது என ஆளும் தரப்பின் அமைச்சர் ஒருவர் உறுதிப்படுத்தினார்.

இதனிடையே 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து இராஜதந்திர ரீதியில் பேச்சுகளை முன்னெடுக்க டில்லித் தலைமை இராஜதந்திரி ஒருவரை நியமிக்கத் தீர்மானித்துள்ளது எனவும், அவர் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் சிறப்பு நிபுணராக இருக்கக்கூடும் எனவும் தெரிய வருகின்றது.

இவ்வாறான இராஜதந்திர ரீதியிலான பேச்சுகளில் இலங்கை ஈடுபட அதிகளவில் வாய்ப்புகள் உள்ளன என்று ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் சிலர் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடா வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளது.

Oshawa மற்றும் Whitchur ch - Stouf fville நகரங்களை சேர்ந்த 29 வயதான இரண்டு தமிழர்களே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர். உயிரிழந்தவர்களில் ஒருவர் கஜன் தனபாலசிங்கம் என உறவினர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## பட்டதாரிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னே ஞானாநந்த தேரர், கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு 5 படிமுறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதோடு, அவற்றில் முதல் பயிற்சி முழுமையான இராணுவப் பயிற்சியாகும். பட்டதாரிகளை இராணுவ முகாம்களுக்குள் முடக்கிவைப்பதால் அரசு எவ்வாறான பலன்களை எதிர்பார்க்கிறது? பட்டதாரிகளுக்கு இந்தப் பயிற்சி தொடர்பில் மீள் பரிசீலனை அவசியம் என்றும் அவர் கூறினார்.

# கிழக்குப் பல்கலைப் படுகொலையின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று

## உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு; நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டமும் முன்னெடுப்பு





கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த வேளை இராணுவத்தால் விசாரணைக்கு என அழைத்துச் சென்று படுகொலை செய்யப்பட்ட 158 பேரின் 30வது ஆண்டு நினைவேந்தல் நேற்று வந்தாறுமூலை வளாக முன்றலில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் குடும்பங்களின் அமைபின் ஏற்பாட்டில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் படுகொலை செய் யப்பட்டவர்களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்கள், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற் றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டவர்கள் பல்கலைக்கழக வளாகத் தின் முன் பாதாதைகளை ஏந்தியவாறு படுகொலை செய் யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி கவனயீர்ப்புப் பேராட்டத்திலும் ஈடுபட்டனர்.

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருந்த நிலையில் பொலிஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படை முகாம்கள் விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டன. இதன் காரணமாக மோதல் தீவிரமடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி நாலாபுறமும் இராணுவ நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் நுழைந்த இராணுவத்தி னர் சில நாட்களில் அம்மாவட்டத்தை தமது நிலைகளை அமைத்துக்கொண்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தஞ்சம் பெற் றிருந்தனர்.

அக்காலத்தில் தஞ்சம் பெற்ற இடங்கள் இராணுவத் தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடைபெற் றன. அங்கிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல் லப்பட்ட பலர் காணாமல் போயுள்ளனர்.

அவ்வாறு காணாமல்போன சம்பவங்கள் நடைபெற்று 30வருடங்கள் கடந்தும் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் உறவினர்கள் இருந்தாலும் அவர் களுக்கு என்ன நடந்தது? என்ற வினாவுக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

கிழக்குப் பல்கலைக் கழக முகாமில் தஞ்சம்பெற்றி ருந்தவர்களில் செப்டம்பர் 5ஆந் திகதி 158 பேர் விசார ணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக் கப்பட்டுள்ளார்கள்.

சம்பவ தினம் காலை 6 மணிக்கு முன்னரே கிழக் குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் இயங் கிய அகதி முகாம் இராணுவத்தினர் மற்றும் அவ்வேளை இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழுக்களாலும் சுற்றிவளைக்கப்பட்டது.

கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து வருகை தந்த இராணுவத்தினரே இந்தச் சுற்றிவளைப்பில் ஈடு பட்டனர். இந்தச் சுற்றிவளைப்பில் அவ்வேளை இராணு வப் புலனாய்வில் செயற்பட்ட கப்டன் முனாஸ் (றிச்சட் டயஸ்), கப்டன் பாலித, கப்டன் குணரத்னா, மேஜர் மஜீத், புளொட் மோகன் ஆகியோரும் வந்திருந்தனர் என்று காணாமல் போனோர் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணையின்போது சாட்சியமளித்த வர்கள் தெரிவித்திருந்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமுக்கு பொறுப் பாக பேராசிரியர் மனோ சபாரத்தினம், கலாநிதி த.ஜெயசிங் கம், கலாநிதி வி.சிவலிங்கம் ஆகியோர் இருந்தனர்.

அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்தி பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்கு பல்கலைக்கழக மைதானத் தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிகையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி மனி தர்கள் முன் நிறுத்தப்பட்டு முகமூடியினால் தலையாட்டப் பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பஸ்களில் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று இந்தச் சம்பவத்தை வருடங்கள் 29 கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாக பலரும் நினைவு கூருகின்றார்கள்.

இந்த இராணுவ சீருடையில் காணப்பட்ட முகமூடி நபர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் களாகவும் இருக்கலாம் என்ற சந்தேகமும் அவர்களிடம் காணப்படுகின்றது.

இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல் லப்பட்ட சம்பவத்தையடுத்து கிழக்குப் பலகலைக்கழக அகதி முகாம் அல்லோலகல்லோகப்பட்டது. எங்கும் அழுகைக் குரல்களையே கேட்க முடிந்தது. அவ்வேளை அந்த பிரதேசத்திலும் மாவட்டத்திலும் நிலவிய பாதுகாப் பற்ற சூழ்நிலை காரணமாக அவர்களைத் தேடிச் செல்ல முடியாதவாறு உறவினர்களும் முகாமுக்குள் முடிங்கிக் கிடந்தனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதானக் குழு பாது காப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப் பாடு செய்தது.

எனினும், இந்தச் சம்பவத்தில் காணாமல் ஆக்கப் பட்ட அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர் என்று பின்னர் அறியமுடிந்தது.

BRRENS FASHION PLANET
பிறென்ஸ் பஷன் பிளானட்
Mens & Womens Wears
Our Special,,
Ladies all Dress Stitching (Trailoring) &
Wedding Saree Blouse Arriworks
Tel: 021 2212777, 076 786 9933, 075 527 9110, 077 332 1937
Fb. Brrens Fashion Planet
Email . brensfashionplanet@gmail.com
No.65, Sivan Temple, North Road, Jaffna.

அன்னா விரைவுப் பொதிகள் சேவை
பிரான்ஸ் - ரூ.1500/ ரூ.1300
ஜேர்மனி - ரூ.1500/ ரூ.1300
டென்மார்க - ரூ.1500/ ரூ.1300
கொலன்ட் - ரூ.1500/ ரூ.1300
பெல்ஜியம்- ரூ.1500 / ரூ.1300
இத்தாலி - ரூ.1650/ ரூ.1400
லண்டன் - ரூ.1600 / ரூ.1150
070 330 5500
075 330 5500
076 122 1566
மேலே உள்ள சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.(வரி உள்ளடக்கப்பட்டுள்ளது)
லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/=
சுவிஸ்- 1350/= கனடா- 1450/= (வரி உள்ளடக்கப்பட்டுள்ளது)
இந்தியா – டுபாய் – சைனா நாடுகளில் பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள ( துணிப்பொருட்கள் தவிர)

# சமூக வலைத்தளங்களில் பெரும் மோசடிக் கும்பல்

## பொதுமக்களுக்குப் பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, செப். 06

பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத் தளங்களினூடாக, மக்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபடும் கும்பல் தொடர் பாக பொலிஸார் எச்சரிக்கை விடுத் துள்ள னர்.

தாய்லாந்து போன்ற நாடுகளில் அதிக சம்பளத்துக்கு வேலைவாய்ப்புகள் இருக்கின்றன என்று விளம்பரங் களை வெளியிட்டும், பரிசுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்தும் சமூக வலைத்தள பாவனையாளர்களை ஏமாற்றி இந்தக் கும்பல் மோசடியில் ஈடுபடுகின்றது எனத் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது தங்களிடம் ஏமாறும் நபர் களின் தனிப்பட்ட தகவல்களையும் வங்கிக் கணக்கு விபரங்களையும் பெற் றுக் கொண்டு, அந்தக் கும்பல் பண மோசடி யில் ஈடுபடுகின்றது எனவும் தெரியவந் துள்ளது.

இவ்வாறாக மோசடிக்காரர்களிடம் சிக்கிய பலர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த முறைப்பாடுகளை அடிப்படையா கக்கொண்டு, சி.ஐ.டியினரும் கணனி குற்றவியல் பிரிவினரும் மோசடிக்காரர் களைக் கண்டுபிடிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

Cartoon Style caricatures
தனிநபர் ஜோடி படங்கள்
பிறந்தநாள், திருமண வாழ்த்துகள்
வரைந்து அச்சிட்டுத்தர, மின்னஞ்சல் செய்ய
கட்டணம் ரூபா 1500 இலிருந்து


விபரங்களுக்கு: கோகுலம்- 0769 355 944
https://www.facebook.com/TamilArtAttack

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சு.கவின் புரட்சி முயற்சி

இலங்கையில் கடந்த அறுபத்தியைந்து கால அரசியலில் மிகப் பெரும் சக்தியாக விளங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி இப்பத்தியில் நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியபடி 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையாகி நிற்கின்றது.

அப்படியே அந்தக் கட்சியின் நிலை அடங்கப் பேகின்றதா அல்லது அது மீண்டெழும் வாய்ப்பைத் தக்க வைக்கப் போகின்றதா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய இக்கட்டுக் கட்டத்தில் அது இப்போது நிற்கின்றது. அடுத்த மூன்று வாரத்துக்குள் அது எடுக்கப் போகின்ற முடிவுதான் அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றது என்பது திண்ணம்.

குறுகிய காலத்தில் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. சு.கவினர்தான் அதிலிருந்து விலகி மாற்றுக் கட்சி ஒன்றை இந்தப் பெரிய எடுப்பில் கட்டி வளர்த்து இராட்சத வடிவம் எடுக்க வைத்தனர். இவ்வளவு நடக்கும் வரை பார்த்திருந்த - வாளாவிருந்த - சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடைசியில் பொதுஜன பெரமுனவில் ஒட்டி வாழும் - தங்கி நிற்கும் - ஒரு கட்சியாக சு.கவை மாற்றிவிட்டார். இன்று அதுதான் அக்கட்சியின் நிலைமை.

தன்னுடைய அரசியல் எதிர்காலம், பாதுகாப்புக் கருதி பொதுஜன பெரமுனவுக்கு எதிராகச் செல்ல அஞ்சும் மைத்திரிபால சிறிசேன, தாம் தலைமை வகிக்கும் கட்சியையும் பொதுஜன பெரமுனவுக்கு அடிமை அமைப்பாக மாற்றி விட்டார்.

ஆனால், இப்போது ஒரு நிலைமை வந்திருக்கின்றது. சு.க. தனது எதிர்காலம் குறித்து தீர்மானகரமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

நடந்து முடிந்த தேர்தலில் பொதுஜன பெரமுன 145 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது.

அதன் நட்புக் கட்சிகளுடன் சேர்ந்து எண்ணிக்கை சரியாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு என்ற இலக்கத்தை - நூற்றியைம்பதை - எட்டியுள்ளது. இதில் ஒருவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டு விட்டதால் எண்ணிக்கை இப்போது 149.

இந்த 149 உறுப்பினர்களில் சு.கவினர் 14 பேர்.

இன்றைய கட்டத்தில் ஆளும் தரப்பு இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதாயின் சு.கவினரின் முழு ஆதரவு தேவை. அதைச் செய்வதற்கு சு.கவினர் முழுமையாகப் பதினான்கு பேரோ அல்லது அதில் கணிசமானோரோ பின்னடிப்பார்களாயின் அரசுத் தரப்புக்குச் சிக்கல்தான். சு.கவினர் பின்வாங்குவதால் ஏற்படக் கூடிய பற்றாக்குறையை நிறைவு செய்வதற்காக எதிரணிக்குள் ஆள்களைத் தேட வேண்டிய கட்டாயம் ஆளும் தரப்புக்கு ஏற்படும். இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் அவசரம் காட்டும் ஆளும் தரப்பு அந்த அவசரத்துக்குள் எதிரணியில் இருந்து போதுமான எண்ணிக்கையினைத் திரட்டி எடுப்பது என்பது உடனடியாகச் சாத்தியப்படக் கூடியதல்ல.

இந்தச் சந்தரப்பத்தைப் பயன்படுத்தி சு.க தனது வலிமையை ஆளும் தரப்புக்குள் இருந்தபடி, அல்லது வெளியே வந்து, ஸ்திரப்படுத்தக் கூடியதான முயற்சிகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

சு.கவின் தனித்துவம் குறித்துச் சிரத்தையுள்ள இரண்டாம் மட்டத் தலைவர்கள் பலர் அதில் துடிப்பாக இருந்தாலும், பொதுஜன பெரமுனவிடம் முழுமையாகச் சரணடைந்து, ஆளும் தரப்பின் கடைக்கண் பார்வையில் அரசியல் செய்யும் கருத்து நிலைப்பாட்டில் இருக்கும் சு.கவின் 'பழசு'களான மைத்திரிபால சிறிசேன, நிமால் ஸ்ரீபாலடி சில்வா போன்றோர், பொதுஜன பெரமுனவுக்குள் சு.கவின் இந்த 'அதிரடிப் புரட்சிக்கு' இணங்கி - இசைந்து - வருவார்களா என்பது கேள்விக்குறியே.

சு.கவின் முன்னாள் பிரமுகர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் மகனும் இப்போதைய இராஜாங்க அமைச்சருமான விதுர விக்கிரமநாயக்கா, சு.க செயலாளர் தயாசிறி தயாசேகரா போன்றோர் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சில தீர்மானங்களை எடுக்கத் தயாராக இருக்கின்றனர்.

எனினும், சு.கவின் பெயரால் - அக்கட்சியின் மூத்த தலைவர்களின் விருப்புக்கு மாறாக - ஆளும் தரப்பின் கடைக் கண் பார்வையினால் - தேசியப்பட்டியல் எம்.பி. பதவியைப் பெற்ற கலாநிதி சுரேன் இராகவன், சு.கவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் என்றாலும், சு.கவின் சில பிரமுகர்கள் அரசுக்குள் ஆரம்பித்திருக்கும் 'புரட்சி' முயற்சிக்கு நிச்சயம் ஒத்துழைக்க மாட்டார் என்று நம்பலாம். சு.கவின் மூத்த உறுப்பினர்களை எல்லாம் ஒதுக்கி விட்டு, கட்சியின் பெயரால் எம்.பி. பதவியை கட்சியின் புதுமுகமான தமக்கு வாரி வழங்கிய ஆட்சித் தலைவர்களுக்கே அவர் விசுவாசமாக இருப்பார். அப்படி விசுவாசத்தைக் காட்டுவதன் மூலம் அரசியலில் அடுத்த கட்டத்துக்குத் தாம் மேலேறுவதையே அவர் விரும்புவார் என்று நம்பலாம்.

இருபதாவது அரசமைப்புத் திருத்த நடவடிக்கையை துவந்த களமாகப் பயன்படுத்தி, தமது கட்சியின் முக்கியத்துவத்தை பொதுஜன பெரமுனவுக்குள் உறுதிப்படுத்துவதற்கு சு.கவினர் ஆரம்பிக்கும் பலப்பரீட்சை வெற்றி பெறுமா? அல்லது அடிபட்டுப்போகுமா? அடுத்து வரும் வாரங்கள் நிலைமையைத் தெளிவுபடுத்தும்.

# தீவிரவாதப் பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகளை நீக்குக!

## மலேசிய முன்னாள் பிரதமர்



கொழும்பு, செப். 06

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குமாறு தமது அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த மொகிதின் யாசினுக்கு வலியுறுத்தினார் என மலேசிய முன்னாள் பிரதமர் மகாதீர் மொகமட் தெரிவித்துள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில் மொகிதின் யாசினுக்கு கடிதமொன்றை அனுப்பி, அந்தக் கடிதத்தின் ஊடாக வலியுறுத்தியுள்ளார் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

புத்ராஜெயாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மகாதீர் மொகமட் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக் கத்தை ஆதரிக்கவில்லை என்றாலும் தீவிரவாத இயக்கங்களின் பட்டிய லில் இருந்து அந்த இயக்கத்தை நீக்குவது மலேசியாவுக்கு நல்லது.

மேலும், ஏனைய நாடுகளைப் போல மலேசியாவும் எந்தவொரு குழுவையும் 'தீவிரவாதிகள்' என சுலபமாக முத்திரை குத்தி விடக் கூடாது.

நான் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிப்பவன் அல்லன். அவர்களுடைய பிரச்சினை இலங்கையில் இடம்பெற்ற ஒன்று. மலேசியாவுக்கு அதில் தொடர் பில்லை.

அத்துடன், மலேசியாவில் அவர்கள் தவறான செயல்களில் ஈடுபடாதபோது அந்த இயக்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது.

மேலும், விடுதலைப்புலிகள் இயக் கத்தை இலங்கை அரசே தீவிரவாத இயக்கம் என்று பட்டியலிடாத போது, மலேசியா ஏன் அந்த இயக்கத்தைத் தீவிரவாத பட்டியலில் வைத்திருக்க வேண்டும்.

இன்றைய மலேசிய பிரதமரும் அண்மையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த வரை உள்துறை அமைச்சராக இருந்தவ ருமான மொகிதீன் யாசினுக்கு எழுதிய கடிதத்தில், புலிகள் இயக் கத்தை இன்ன மும் தீவிரவாத பட்டியலில் வைத்திருப்ப தற்கான காரணம் ஏதும் இருப்பதாகத் தமக்குத் தெரியவில்லை என குறிப்பிட்டி ருந்தேன்.

ஆகவே, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக் கத்தை தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குவது மலேசியாவுக்கு நல்லது எனக் கடிதத்தில் வலியுறுத்தி இருந்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 164 பேர் மீண்டனர்



வன்னி விமானப் படை தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துக் கொண்ட 164 பேர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அவர்கள் நேற்றுக் காலை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என இலங்கை விமானப் படை தெரிவித்துள்ளது.

# ரவியின் மனுவுக்கு ஆட்சேபனை: சட்டமா அதிபருக்கு கால அவகாசம்

கொழும்பு, செப். 06

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்டோரைக் கைதுசெய்வதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணை உத்தரவை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்த மனுக்களுக்கு எதிராக ஆட்சேபனை முன்வைப்பதற்கு எதிர்வரும் 14ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் சட்டமா அதிபருக்கு கால அவகாசம் வழங்கப்பட் டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்திய வங்கியின் இரண்டு பிணைமுறி வழங்கல்களில், சுமார் 52 பில்லியன் ரூபா அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், முன்னாள் நிதி அமைச்சர் ரவி கரு ணாநாயக்க உள்ளிட்ட 7 பேரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் நேற்று மீண் டும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் ஏ.எச்.எம்.டி. நவாஸ், சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபரின் சார்பில் முன்னிலையாகிய பிரதி சொலிசிட்டர் நாயகம் மிலிந்த குணதிலக, குறித்த மனுக்களுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக கால அவகாசம் கோரினார்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் குழாம், ஆட்சேபனைகளை முன்வைப்பதற்காக சட்டமா அதிபருக்கு எதிர்வரும் 14ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைவர் ஜெப்ரி அலோசியஸ், அந் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், பணிப்பாளர்களான கசுன் பலிசேன, சித்தரஞ்சன் ஹுலுகல்லே மற் றும் இலங்கை மத்திய வங்கியின் இரு அதிகாரிகளான எஸ். பத்மநாதன், இந்திக சமன் குமார ஆகியோரினால் குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

# நியூ டயமன்ட் எண்ணெய்க் கசிவு வேண்டிய நடவடிக்கை எடுக்குக!

## பிரதமர் அவசர உத்தரவு

சங்கமன்கண்டி இறங்குதுறையில் தீ விபத்திற்குள்ளாகியுள்ள MT NEW DIAMOND எண்ணெய் கப்பலால் கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தடுப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

24 மணிநேரமும் செயற்படக்கூடிய ஒரு கூட்டு நடவடிக்கையின் ஊடாக விபத்திற்குள்ளான கப்பலால் கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு அந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலையீட்டுடனும் சம்பவ முகாமைத்துவக் குழு, கடல்வள பாதுகாப்பு மற்றும் கடல் வள முகாமைத்துவத் திணைக்களம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை துறைமுக அதிகார சபை, சுற்றாடல் அதிகார சபை, கடற்றொழில் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 15 நிறுவனங்கள் ஒன்றிணைந்து விபத்திற்குள்ளான கப்பலின் தீயைக் கட்டுப்படுத்துவதற்கும், கடல் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப் பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளிலும் மேற் பார்வை செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளன.

குவைத் மீனா அல் அஹமதியா துறைமுகத்திலிருந்து இந்தியாவின் ஒடிசா பிராந்தியத்தின் பெரடிப் துறைமுகம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பனாமா இராஜ்ஜியத்திற்குச் சொந்தமான MT NEW DIAMOND எண்ணெய் கப்பலில் இலங்கைக்கு 38 கடல் மைல் தொலைவிலுள்ள சங்கமன்கண்டியை அண்மித்த பகுதியில் வைத்து, நேற்றுமுன்தினம் திடீரென தீப்பரவல் ஏற்பட்டது. அந்தக் கப்பலில் 2 லட்சத்து 70 ஆயிரம் மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்நிலையில், எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பகுதிக்கு இதுவரை தீ பரவல் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை –

**வவுனியா பிரதேசத்தில் -**

பூவரசங்குளம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**

கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும்,ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்படும் என்று மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

# யாழில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தை சிரமத்தை எதிர்கொள்ளும் பெற்றோர்!

## உதவிக் கரங்களை எதிர்பார்க்கின்றனர்

கொழும்பு, செப். 05

கட்டுவன் பகுதியைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் கடந்த மார்ச் மாதம் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளைப் பிரசவித்திருந்தார்.

குழந்தைகள் நால்வரும் முழுமையான ஆரோக்கியத்துடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குழந்தை பராமரிப்பு பிரிவிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் அவர்களை வளர்ப்பதில் பொருளாதார ரீதியாக பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனப் பெற்றோர் தெரிவித்தனர்.

அதனால் தமக்கு அரச உதவி வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் என நான்கு குழந்தைகள் கடந்த மார்ச் மாதம் பிறந்தன.

குழந்தை மருத்துவநிபுணர் வைத்திய கலாநிதி சிவலிங்கம் ஜெயபாலனின் சிறப்புக் கண்காணிப்பின் கீழ் குழந்தைகளுக்கான மாதாந்த சிகிச்சை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நான்கு குழந்தைகளையும் வளர்ப்பதில் பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து உதவிகளைப் பெறுவதற்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ நிபுணர் சிவலிங்கம் ஜெயபாலன் வழிவகைகளை முன்னெடுத்துக் கொடுத்தார்.

எனினும் எமக்கு இதுவரை எந்த வித உதவிகளும் கிடைக்கவில்லை.

நாள் ஒன்றுக்கு ஒரு பால்மா பெட்டியை வாங்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளோம் என்று பெற்றோர்கள் தெரிவித்தனர்.

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L 2020 தொழில்நுட்ப பிரிவு

மாபெரும் விசேட செயலமர்வு

காலை 8 - மதியம் 2.30 | 07.09.2020 முதல்

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல்<br>உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

- ✔ தொழினுட்பப்பிரிவின் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.
- ✔ இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- ✔ எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
- ✔ கடந்த மூன்று வருடமாக தேசிய நிலையிலும்,மாவட்ட நிலையிலும் பல சாதனை மாணவர்களை உருவாக்கிய Techno worldஇன் ஆசிரியர்களால் நடாத்தப்படும்.
- ✔ கையேடுகளை சிரமமின்றி பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்
- ✔ வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

# தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக ஊடுருவிய இலங்கையர் கைது!

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகு ஊடாக தமிழகத் துக்குள் ஊடுருவிய இலங்கையர் ஒருவரை இராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பிரதீப் குமார் பண்டாரநாயக்க (வயது30) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக படகு ஊடாக தமிழகத்துக்குள் சிலர் ஊடுருவி உள்ளனர் என இராமேஸ்வரம் மெரைன் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்த இரகசிய தகவலுக்கமைய தனுஸ்கோடி கடற்கரை ஓரத்தில்நேற்று(வெள்ளிக்கிழமை) இரவு, ரோந்து பணியில் பொலிஸார் ஈடுபட்டனர்.

அப்போது, கம்பி பாடு கடற்கரையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த ஒருவரை கைது செய்து, பொலிஸார் விசாரணை செய்த போது,அவர் இலங்கையர் என்பது தெரியவந்தது.

மேலும் கைதாகியவர் சிங்கள மொழிபேசுவதால் இவர் தொடர்பாக மத்திய உளவுத்துறை அதிகாரிகள் தீவிரமாக விசாரணையை முன்னெடுத்துள்ளனர் என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கைக்கு அமெரிக்கா பகிரங்கமாக எச்சரிக்கை!

கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள சீனத் தொடர்பாடல் நிர்மாண நிறுவனத்துடன் தொடர்புகளை வைத்திருக்கும் இலங்கை, இதுதொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த நிறுவனத்தாலேயே கொழும்பு துறைமுக நகரம் உள்ளிட்ட பல்வேறு நிர்மாணப் பணிகளை இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிர்மாண நிறுவனம் இந்திய பசுபிக் பிராந்தியத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதுடன், சுற்றாடல் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.

இவ்வாறான முறைகேடுகள் மற்றும் இறையாண்மை மீறலில் இருந்து நாடுகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

9 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வடக்கு கிழக்கில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு நான் காரணமல்லன். அரசமைப்பு உள்ளிட்ட செயற்பாடுகளில் பங்கேற்று முன்னெடுத்தமையும், ஐ.நா.விடயங்களைக் கையாண்டமையும், சிங்கள ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியும் தவறானவையாக இருந்திருந்தால் மக்களின் அங்கீகாரம் எனக்குக் கிடைத்திருக்காது. நான் தோல்வி அடைந்திருப்பேன். ஆனால், கடந்த காலத்தில் நடைபெற்ற அனைத்து விடயங்களுக்கும் நானே பொறுப்பாளி என்று என்னைப் பிழையாகச் சித்திரித்தவர்களே நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்திருக்கின்றார்கள்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செவ்வியின் முழுவடிவம் வருமாறு:-

**கேள்வி:-** பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளமைக்கான காரணங்களை மீளாய்வு செய்துள்ளீர்களா?

**பதில்:-** 2015 ஆம் ஆண்டு எமது பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட நல்லிணக்க அரசாங்கம் இடைநடுவே வீழ்ச்சி கண்டது. அந்த அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையீனமே எம்மையும் பாதித்தது. அந்த நிலைமை 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின் நீட்சியாகப் பொதுத்தேர்தலிலும் பிரதிபலித்துள்ளது. அத்துடன் அந்த அரசாங்க காலத்தில் எமது மக்களுக்கு பல்வேறு நன்மையான விடயங்கள் நடைபெற்றன. ஆனாலும், பலமடங்காகக் காணப்பட்ட எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த நிலைமை பூதாகரமாகக் கப்பட்டதோடு எதுவுமே நடைபெறவில்லை என்ற பிரசாரத்திற்கும் உரமிட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முடிவுகள் வட்டாரங்களில் உள்ள வேட்பாளர்களை அடியொற்றியதாக இருந்திருக்கும் என்றும் அவ்வாறானதொரு நிலைமை நாடாளுமன்றத் தேர்தலில் வராது என்றும் கருதியிருந்தோம். ஆனால் அதனைவிடவும் அதிகமான பின்னடைவுகளே ஏற்பட்டிருக்கின்றன. இதனைவிடவும், பொருளாதார ரீதியான காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. வாழ்வாதார விடயங்கள், வேலைவாய்ப்பு போன்றவையும் பிரதான பங்கு வகிக்கின்றன.



# என்னைப் பிழையாகச் சித்திரித்தவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி!

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

குறிப்பாகத் தமிழரசுக் கட்சியில் இளையோரை உள்ளீர்ப்பதற்கான விசேடதிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆரம்பத்தில் துறைசார்ந்த இளம் சந்ததியினருக்கு வேட்பாளர்களாகக் களமிறங்க சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று சம்பந்தன் ஐயா அறிவித்திருந்தபோதும் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டது. தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11பேரில் நால்வர் மட்டுமே வெற்றி பெற்றுள்ளோம். அத்துடன் எமது கட்சியின் வேட்பாளர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையும் முக்கியமான காரணமா கின்றது.

**கேள்வி:-** பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகிய கையோடு நீங்கள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் பின்னடைவுகளுக்கு கட்சித்தலைவரும், பொதுச்செயலாளரும் காரணமென்று பிரதிபலித்திருந்தீர்களே....?

**பதில்:-** நான் அவர்கள் காரணமென்று கூறவில்லை. அவர்கள் இருவரினதும் தோல்விகள் கட்சியின் வெகுவான பின்னடைவை வெளிப்படுத்தியுள்ளது என்றே சுட்டிக்காட்டியிருந்தேன்.

**கேள்வி:-** சம்பந்தனும், நீங்களும் இணைந்து தன்னிச்சையாக எடுத்த தீர்மானங்களும், செயற்பாடுகளும் கூட்டமைப்பின் வெகுவான பின்னடைவுக்கு காரணமாகின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

**பதில்:-** சம்பந்தனும், நானும் கட்சியின் அனைத்துத் தீர்மானங்களையும் எடுத்து செயற்பட்டிருந்தோம் என்பதில் மக்கள் அதிருப்தி அடைந்திருப்பார்களாயின் எம் இருவருக்கும் அங்கீகாரம் வழங்கி இருக்க மாட்டார்கள் அல்லவா? அவ்வாறு நடைபெறவில்லையே. ஆகவே, அவ்வாறு கூறுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது,

**கேள்வி:-** முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் பாரியாரான சசிகலா ரவிராஜ் தனது சொந்த பிரதேசத்திலேயே பரப்புரைகளை முன்னெடுக்க முடியாது உங்கள் சார்பானவர்கள் நெருக்கடிகளை ஏற்படுத்தினார்கள் எனவும், விருப்பு வாக்குகள் தொடர்பிலும் பகிரங்கமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளாரல்லவா?

**பதில்:-** நான் அறிந்தவரையில் திருமதி சசிகலா ரவிராஜ், அவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்தவர் அல்லர். அவருடைய பெயரில் இயங்கி வந்த முக நூல் ஒன்றிலேயே இந்த விடயங்கள் கூறப்பட்டிருந்தன. எனினும் அது தனக்கு உரித்தானது அல்ல என்று அவர் குறிப்பிட்டு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

**கேள்வி:-** இல்லை, வீரகேசரி வாரவெளியீட்டுக்கு 17 - 07, 23 -08 ஆகிய திகதிகளில் வழங்கிய பிரத்தியேக செவ்விகளில் அவர் அவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளமையோடு, பிரசாரக் காலத்தில் தென்மராட்சியில் உள்ள பல கிராமங்களில் அவ்விதமான நிலைமைகள் காணப்பட்டுள்ளனஎன்றாரே?

**பதில்:-** சசிகலா ரவிராஜ், அவ்விதமான கருத்துக்களை தேர்தல் பிரசாரக்காலத்தில் வேறு பலருக்கும் கூறியிருக்கிறார் என எனக்கு அறியக்கிடைத்தது. ஆனால் நேரடியாக என்னிடத்தில் அவர் எதனையும் கூறவில்லை. உண்மையிலேயே சிங்கள ஊடகத்திற்கு நான் வழங்கிய செவ்விக்குப் பின்னர் என்னுடன் இணைந்து பிரசாரங்களைச் செய்தால் தாம் தோல்வி அடைந்து விடுவோம் என்ற மனநிலையில் தான் எமது கட்சியின் வேட்பாளர்கள் இருந்தார்கள். திருமதி ரவிராஜும் அத்தகைய நிலைப்பாட்டிலேயே இருந்தார் என நான் அறிந்திருந்தேன்.

சசிகலா தேர்தலில் போட்டியிடுகிறார் என அறிவித்தபோது நானே அவரை உள்ளீர்த்ததாக உண்மைக்கு மாறாக கூறினார்கள். அதன் பின்னர் அவர் பிரசாரப் பணிகளை ஆரம்பித்தபோது எமது கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சயந்தனே அவரை பல இடங்களுக்கு அழைத்துச்சென்றிருந்தார். கொரோனா காலத்தில் நான் கொழும்பில் இருந்தேன். அதன்போது தான் செவ்வியையும் வழங்கியிருந்தேன். அதன் பின்னரேயே சசிகலா உட்பட ஏனைய வேட்பாளர்களும் என்னுடன் இணைந்து பொதுவெளியில் தோன்றினால் தாங்கள் தோற்றுவிடுவோம் என்று அச்சம் கொண்டிருந்தனர்.

பெண் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக இறுக்கமான நிலைப்பாடுகளை நான் கடந்த காலத்தில் எடுத்திருந்தேன். ஆகவே, பெண் பிரதிநிதித்துவம் அற்றுப்போக வேண்டும் என்ற வகையில் நிச்சயமாக நான் செயற்பட்டவன் அல்லன். ஆனால், சசிகலா ரவிராஜ் எனக்காகப் பிரசாரம் செய்த பெண்கள் அமைப்புக்களுடனேயே இணைந்து செயற்படுவதற்கு விரும்பியிருக்கவில்லை.

**கேள்வி:-** தேசியப் பட்டியலுக்கான பெயர் பட்டியலிலும் பின்னர் கிடைத்த தேசியபட்டியல் ஆசனத்திற்கான தெரிவிலும் உங்களுடைய ஆதிக்கம் இருந்ததாக கூறப்படுகின்றதே....?

**பதில்:-** தேசியப்பட்டியலுக்கான பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும்போது, அம்பிகா சற்குணநாதனின் பெயரை சம்பந்தனே முன்மொழிந்தார். ஆனால், அவருடைய விருப்பைக் கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு மட்டும்தான் என்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப்பணியை முன்னெடுத்தேன்.

ஆனால், நியமனக்குழு கூட்டத்தின்போது ஏற்கனவே எமது கட்சியின் தீர்மானத்திற்கு அமைவாகப் புதிய இளம் சந்ததியினரை வேட்பாளர்களாகக் களமிறக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். ஆனால், யார் யாருக்கு ஆசனம் வழங்காது விடுவது என்பதில் குழப்பம் ஏற்படலாம் என்ற காரணத்திற்காகக் கடந்த முறை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த அனைவரையும் மீள போட்டியிட அனுமதிப்பதென்றும் மக்கள் தீர்மானிப்பார்கள் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் நியமனக்குழுக் கூட்டத்தில் சரவணபவனும் அமர்ந்திருக்கின்ற சந்தர்ப்பத்திலேயே அவருக்கு ஆசனம் வழங்க கூடாது என்றும் நேரடியாகவே கூறியிருந்தேன். அதற்கான காரணங்களையும் குறிப்பிட்டிருந்தேன். இதனைவிட நான் எந்தவிதமான ஆதிக்கத்தையும் செலுத்தவில்லை.

**கேள்வி:-** கட்சித்தலைவரின் தோல்வி, பெண் பிரதிநிதித்துவம் இன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது தேசியப் பட்டில் மூலமாகக் கிடைத்த ஆசனம் அம்பாறைக்கு வழங்கப்பட்ட செயற்பாட்டிலும் தாங்களே செயலாளர் ஊடாகக் காய் நகர்த்தினீர்கள என்று சொல்லப்படுகின்றதே?

**பதில்:-** எமக்கு இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைக்கும் என்ற அடிப்படையில் நியமனக்குழுவில் அவற்றை யாருக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் முதலாவது ஆசனத்தை திருமலையில் போட்டியிட்ட குகதாசனுக்கும், இரண்டாவது ஆசனத்தை அம்பிகா சற்குணநாதனுக்கும் வழங்க வேண்டும் என்பதே அந்தத் தீர்மானமாகும். ஆகவே, அந்த தீர்மானத்தை மாற்றாது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது.

கடந்த 7ஆம் திகதி நானும் சிறிதரனும் மாவை.சேனாதிராசாவின் இல்லத்திற்குச் சென்றோம். அதன்போது தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பில் பேசப்பட்ட போது மாவை.சேனாதிராசா அதனைத் தனக்கு வழங்குமாறு எந்தச் சந்தர்ப்பத்திலும் கோரவில்லை. பெண் ஒருவருக்கு அல்லது அம்பாறைக்கு வழங்க வேண்டுமென்ற தனது நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தார். அந்தச்சந்தர்ப்பத்தில் ஏற்கனவே எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக குகதாசனுக்கு அந்த ஆசனத்தை வழங்கி அவரை அம்பாறை மாவட்ட மேற்பார்வை உறுப்பினராக செயற்பட வைக்க முடியும் என்று நான் கூறியிருந்தேன். அதற்கு அடுத்து சம்பந்தன் தலைமையில் திருமலையில் நடைபெற்ற கூட்டத்திலும் இந்த நிலைப்பாட்டையே நான் வெளிப்படுத்தியிருந்தேன்.

**கேள்வி:-** அப்படியென்றால் அம்பாறைக்குத் தேசியப்பட்டில் ஆசனத்தை வழங்குவதென்ற தீர்மானம் எவ்வாறு எடுக்கப்பட்டது?

**பதில்:-** திருமலையில் நடைபெற்ற கூட்டத்தின்போது, கட்சியின் பொதுச்செயலாளர்

(7 ஆம் பக்கம் பார்க்க...)

# என்னைப் பிழையாக...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கி.துரைராஜசிங்கமே அம்பாறைக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்குவதற்கான நியானமான காரணத்தை வெளிப்படுத்தி முன்மொழிவைச் செய்தார். அதாவது, கடந்த தடவை திருமலைக்கு வழங்கப்பட்டிருந்த தேசியப் பட்டியல் ஆசனம் இரண்டரை வருடங்களின் பின்னர் அம்பாறைக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தாலும் அது நடைபெற்றிருக்கவில்லை. இம்முறை அங்கு பிரதிநிதித்துவமும் இழக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்பார்வை உறுப்பினர்களை நியமிப்பதை விடவும் நேரடியாகவே அம்பாறைக்கு ஆசனமொன்று வழங்கப்பட வேண்டியது அவசியம் என்று பொதுச்செயலாளர் கூறினார். பொதுச்செயலாளரின் கருத்து நியாயமாக இருந்தாலும் கூட ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை மாற்றி புதிய தீர்மானம் எடுக்கப்படக் கூடாது என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது. அதனை அவ்விடத்திலே வெளிப்படுத்தியிருந்தேன்.

**கேள்வி:-** ஆனால் பங்காளிக்கட்சிகள், தேசியப் பட்டியல் ஆசனத்தை உங்களின் கட்சித் தலைவருக்கு வழங்கவேண்டும் என்றல்லவா தீர்மானித்து அறிவித்திருந்தன?

**பதில்:-** எமது நியமனக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை பங்காளிக் கட்சிகளும் அறியும். அவ்வாறிருக்கத் திடீரென அந்தத் தீர்மானத்துக்கு எதிராக பங்காளிக் கட்சிகள் ஒரு தீர்மானத்தை ஏன் எடுத்தார்கள் என்பது எனக்கு புரியாதுள்ளது.

**கேள்வி:-** தேர்தலில் போட்டியிடுவதற்கு சரவணபவனுக்கு வாய்ப்பு வழங்ககூடாது என்ற நிலைப்பாட்டில் நீங்கள் இறுக்கமாக இருந்தமைக்கு என்ன காரணம்?

**பதில்:-** அதற்குப் பல காரணங்கள் உள. அவற்றை பகிரங்கமாகக் கூற முடியாது. ஆனால், அனைத்துக் காரணங்களையும் நான் கட்சித்தலைவர் மாவை சேனாதிராசாவிடத்தில் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கூறியிருந்தேன். அதன் பின்னர் தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் பிறிதொரு கூட்டத்திற்காகச் சென்றிருந்தபோது, மாவை சேனாதிராசா அங்கு பிரசன்னமாகி சரவண பவனுக்குச் சொந்தமான ஊடகத்தில் வெளியான பிரதான செய்தியொன்றை சுட்டிக்காட்டி கடுந்தொனியில் கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கொண்டிருந்தார்.

அதன்போது, நான் 'இவ்விதமான காரணங்களால்தான் அவருக்கு (சரவணபவனுக்கு) ஆசனங்களை வழங்கக் கூடாது என்று முன்னரே கூறினேன்' என்று குறிப்பிட்டேன். நான் இவ்வாறு குறிப்பட்டமையை அலுவலகத்திலிருந்து சிலர் பகிரங்கப்படுத்திவிட்டனர். ஆனால், அவருக்கு எதிரான எனது நிலைப்பாட்டை நான் பொதுவெளியில் பேசியமை கிடையாது. கட்சித் தலைமையிடத்திலும், நியமனக் குழுவிலும் (அவர் முன்னிலையிலேயே) தான் வெளிப்படுத்தியுள்ளேன். ஆனால் சரவணபவன், பொதுவெளியில் என்னைக் கடுமையாக விமர்சித்தார். இரு வாரத்தில் நான் தூக்கி எறியப்படுவேன் என்றெல்லாம் தனது ஊடகத்தினைப் பயன்படுத்தி பிரசாரம் செய்தார். ஈற்றில் அதற்கெல்லாம் மக்கள் சரியான தீர்ப்பளித்துள்ளனர்.

**கேள்வி:-** தேர்தலில் வேட்பாளர்களுக்கு இடையிலான ஒற்றுமை பற்றி கரிசனையை வெளிப்படுத்துகின்றீர்கள். ஆனால், சுன்னாகத்தில் நடைபெற்ற நீங்கள் பதிலளிக்கும் கூட்டத்தில் கட்சித்தலைமை மிகமோசமாக விமர்சிக்கப்பட்டமையோடு அதுவொரு திரைமறைவு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றதே....?

**பதில்:-** 2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் 18ஆம் திகதி யி லிருந்து எம்மை விமர்சிப்பவர்களின் வினாக்களுக்கு பொதுவெளியில் பதிலளிக்கும் முறைமையொன்றை நான் பின்பற்ற ஆரம்பித்திருந்தேன். முதலாவதாக சி.வை.தாமோதரம்பிள்ளையின் நினைவுப்பேருரை ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டபோது அதில் பங்குபெறுபவர்கள் என்னிடத்தில் கேள்விகளை எழுப்ப விரும்புவகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்டு அந்த நிகழ்வில் எழுப்பபட்ட கேள்விகளுக்குப் பதில்களை வழங்கியிருந்தேன். அதன்பின்னர் அவ் விதமான நிகழ்வுகள் சாவகச்சேரி, யாழ்.வீரசிங்கம் மண்டபம், வடமராட்சி என்று தொடர்ந்து ஐந்தாவதாக சுன்னாகத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வுகளின் ஏற் பாடுகளிலோ பங்கேற்பவர்கள் விடயத்திலோ எனக்கு எவ்விதமான தொடர்பும் எனக்கு இல்லை.

அவ்வாறிருக்க, சுன்னாகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது வினவப்பட்ட பல கேள்விகளில் மாவை சேனாதிராசா பற்றியொரு கேள்வியும் இருந்தது. எனினும் அந்தக் கேள்விக்கு எனக்கு பதிலளிக்க முடியாதிருந்தது. அதனை நான் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தேன். யாருக்கு ஏன், நியமனம் வழங்கப்படவில்லை என்பதை பொதுவெளியில் தெரிவிக்க முடியாது. நியமனக்குழு தீர்மானங்களை பொதுவெளியில் பேச முடியாது. உட்கட்சி இரகசியங்களை பகிரங்கப்படுத்தமாட்டேன் என்றும் நான் கூறியிருந்தேன். இவ்வாறிருக்க, நான் பதிலளிக்காமையானது மாவை. சேனாதிராசாவிடத்தில் தவறாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. கட்சித்தலைமைக்கு எதிராக நான் செயற்பட்டமை போன்று சித்திரிக்கப்படுவது மிகவும் மோசமான நிலையாகும்.

**கேள்வி:-** சிறிதரன், சிவமோகன், கோடீஸ்வரன் என்று பங்காளிக்கட்சிகளின் ஆசனங்கள் ஊடாக உறுப்புரிமை பெற்றவர்கள் கட்சி மாறிய தருணங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலை தொடர்கதையாக இருக்கின்றதே...?

**பதில்:-** நான் தேர்தல் அரசியலில் பிரவேசித்ததன் பின்னரான சந்தர்ப்பத்தில் சிவமோகன் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்திற்கு வருகை தந்தபோது ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினரான அவர் எமது கட்சியின்கூட்டத்திற்கு எவ்வாறு வரமுடியும். அவரை உடனடியாக வெளியேற்றுங்கள் என்று முதலாவதாகக் குரல் எழுப்பியவன் நான். இருப்பினும் அவர் அந்தக் கட்சியிலிருந்து விலகிவிட்டார் எனவும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட போகிறார் எனவும் அவர் கூறியிருந்தார். அது தனிமனிதருக்குள்ள ஜனநாயக உரிமை என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கோடீஸ்வரன் தமிழரசுக்கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். அம்பாறையில் ரெலோவிற்கு ஆசனம் வழங்கப்பட்டபோது எமது கட்சியின் உறுப்பினருக்கு வாய்ப்பு வழங்கப்போவதாக ரெலோ தெரிவித்தபோது நாம் அதனை ஆதரித்தோம். அவரும் வெற்றிபெற்ற ஐந்து வருடங்கள் ரெலோ சார்பாக செயற்பட்டார். அதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கவுமில்லை. அதன் பின்னர் அவர் மீண்டும் எமது கட்சியின் உறுப்பினராகச் செயற்படுகின்றார்.

**கேள்வி:-** சிங்கள ஊடகத்தற்கு நீங்கள் வழங்கிய நேர்காணலின் பின்னர் எழுந்த சர்ச்சைகளின்போது ஊடகப்பேச்சாளர் பதவிலிருந்து உங்களை விலகுமாறு கோரப்பட்டதா...?

**பதில்:-** இல்லை.

**கேள்வி:-** அந்த நேர்காணலின் பின்னர் எழுந்த சர்ச்சைகளும், தொடர்ச்சியாக நீங்கள் ஊடகப் பேச்சாளராக நீடித்து முன்னெடுத்த செயற்பாடுகளும் தேர்தல் பின்னடைவுக்குத் தாக்கம் செலுத்திய காரணங்களில் ஒன்றாகக் கருதுகின்றீர்களா?

**பதில்:-** எனது கருத்துக்களும், செயற்பாடுகளும் தவறாக இருந்திருந்தால் நான் அல்லவா தேர்தலில் தோல்வி அடைந்திருக்க வேண்டும். ஆனால், மக்கள் எனக்கு ஆணை வழங்கி அங்கீகரித்துள்ளனர். அதேநேரம், எனது கருத்து தவறு என்று பிரசாரம் செய்தவர்கள் தோல்வியடைந்திருக்கின்றார்கள்.

**கேள்வி:-** கூட்டமைப்பின் ஊடப்பேச்சாளர், கொறடா பதவிகள் பங்காளிக் கட்சிகளுக்கு வழங்குவதெனக் கொள்கை அளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறதே?

**பதில்:-** இந்த விடயத்தை பங்காளிக்கட்சிகள் தான், ஊடகங்கள் ஊடாகக் கூறிவருகின்றன. இந்தப் பதவிகளை நாடாளுமன்றக் குழுவே தீர்மானிக்கும். ஊடகச் செய்திகளை அடுத்து இந்த விடயம் சம்பந்தமாகப் பேசுவதற்காக சம்பந்தன் என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டிருந்தார். அதன்போது, பதவிமாற்ற செய்திகள் வெளியாகி வருகின்றமை தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் என்று அவர் கூறினார். அச்சமயத்தில் அதன் பின்னணியை அறிந்துள்ள நான் அதற்கான அவசியமில்லை என்று பதிலளித்துள்ளேன்.

**கேள்வி:-** கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் பதவியை பங்காளிகளுக்கு வழங்குவதற்கு நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா?

**பதில்:-** இதனை நாடாளுமன்றக் குழுவே தீர்மானிக்கும். நாடாளுமன்றக் குழுவில் எடுக்க வேண்டிய தீர்மானம் குறித்து நான் பதிலளிக்க முடியாது. மேலும் புதிய நாடாளுமன்றக் குழு முதற்தடவையாகக் கூடியபோது புதிய நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் அவற்றை அன்றையதினமேசெய்ய முடியும் என்றும் சம்பந்தன் கூறினார். ஆனால், அச்சமயத்தில் யாரும் எதுவும் பேசவில்லை.

நாடாளுமன்ற குழுக்களுக்கான தெரிவுகளை மேற்கொள்வதற்கான குழுவிற்கு உறுப்பினரை உடனடியாக நியமிக்க வேண்டியிருந்தது. கடந்த தடவை மாவை.சேனாதிராசா அந்தப்பதவியை வகித்திருந்த நிலையில் தற்போது அதனை செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்குவதென்று நான் முன்மொழிந்தேன். அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த நாடாளுமன்றில் குழுக்களுக்கான பிரதி தலைவர் பதவியை எமக்கு தருவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியபோது நானே செல்வம் அடைக்கலநாதனை பிரேரித்திருந்தேன். அப்போது ரெலோவிற்கு இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களே இருந்தனர். அதிலும் ஒருவர் தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். அந்தப் பதவியை ரெலோவிற்கு வழங்கிவிட்டு தமிழரசுக்கட்சி பங்கீடு கோரவில்லை என்பதையும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

**கேள்வி:-** தனிப்பட்ட முறையில் ஊடகப்பேச்சாளர் பதவியில் நீடிக்க வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்களா...?

**பதில்:-** தனிப்பட்ட விருப்பு இல்லை. நாடாளுமன்றக் குழுவே தீர்மானிக்க வேண்டும்.

**கேள்வி:-** தமிழரசுக்கட்சியின் தலைமையை சிறிதரன் ஏற்க தயாராக இருக்கிறார் என அவரே கூறியபோது அதற்கு பூரண ஆதரவளிப்பேன் எனக் கூறியிருக்கின்றீர்களே, அப்படியென்றால் கட்சித் தலைமை மாற்றம் தொடர்பில் நகர்வுகளைச் செய்கின்றீர்களா?

**பதில்:-** இந்த விடயத்தில் ஊடகங்களின் தலைப்பிடுதலால் குழப்பநிலையொன்று ஏற்பட்டுவிட்டது. சிறிதரனிடத்தில் கட்சித்தலைவர் பதவியை ஏற்கத்தயாரா என்று வினவப்பட்டபோது, அவர் தற்போதைக்கு கட்சித்தலைவர் பதவியில் மாற்றம் தேவையில்லை என்றே முதலில் பதிலளித்திருக்கின்றார். பின்னர், அவரிடத்தில் துருவப்பட்டபோது தலைமையை ஏற்க வேண்டிய சூழலொன்று வருமாயின் அனைவரும் இணைந்து வழங்கினால் ஏற்பேன் என்று கூறியிருக்கின்றார். அவ்வாறான நிலைமை உடன் வருமென்று அவர் எங்கும் கூறவில்லை.

இந்த விடயம் வெளியாகி இரண்டு நாள்களின் பின்னர் சிறிதரனின் கருத்து தொடர்பில் என்னிடத்தில் வினவப்பட்டபோது, சிறிதரன் உடனடியாக தலைமைப் பதவியைக் கோரவில்லை என்றே கூறியிருக்கின்றார். அவருடைய கருத்தைக் கவனமாகப் பாருங்கள். அனைவரும் இணங்கி தலைமைப் பதவியை வழங்கும் நிலைமையொன்று வருகின்றபோது நானும் அதில் உள்ளடங்குகின்றேன் என்றே கூறினேன். இந்தக் கருத்தை, சிறிதரன் தலைமையேற்க சுமந்திரன் ஆதரவு என்று தலைப்பிட்டு விட்டார்கள். அவ்வாறிருக்க, தற்போதைய நிலையில் அவ்விதமான மாற்றங்கள் எதுவும் அவசியமில்லை.

**கேள்வி:-** கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் முதுமை உள்ளிட்ட விடயங்களைக் கருத்தில்கொள்கின்றபோது, கூட்டமைப்பிற்கான புதிய தலைமை யார் என்ற விடயம் முக்கியமாகின்றதல்லவா?

**பதில்:-** இதற்கு நான் பதிலளித்தால் சிறிதரனுக்கு ஏற்பட்ட நிலையே எனக்கும் ஏற்ப டும்.

**கேள்வி:-** அவ்வாறில்லை, அடுத்த தலைமைத்துவத்தை வழங்கத் தயாராக இருப்பவர்களை அடையாளம் காண முயல்வது யதார்த்தமான விடயம் தனே?

**பதில்:-** 'ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் பதவியை உங்களுக்கு வழங்கினால் ஏற்பீர்களா?' என்று யாராவது என்னிடத்தில் வினா எழுப்பினால் நான் 'ஆம்' என்றே பதிலளிப்பேன். அவ்வளவு தான், உங்களுடைய இந்த வினாவுக்கு எனது பதிலாகும்.

**கேள்வி:-** தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு சாத்தியமான சூழல்கள் இருக்கின்றனவென நம்புகின்றீர்களா?

**பதில்:-** நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கொண்டிருக்கும் தற்போதைய ஆட்சியாளர்கள் சிங்கள, பௌத்த நிலைப்பாட்டில் தான் செயற்படப்போகின்றார்கள். இதற்கு எதிராகவே எமது செயற்பாடுகளும், விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார் ஆகியோரின் செயற்பாடுகளும் அமையவுள்ளன. ஒன்றிணைந்து செயற்படுவதில் அவர்கள் முரண்டு பிடித்தாலும் செயற்பாடுகள் ஒரேகோணத்திலேயே அமையப்போகின்றன. ஆகவே, ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுகின்றனவாகவே அது பிரதிபலிக்கும்.

**கேள்வி:-** ஆகக்குறைந்தது நாடாளுமன்ற செயற்பாடுகளிலாவது பொது இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளனவா?

**பதில்:-** இந்த நாடாளுமன்றில் எமக்கு 10ஆசனங்களும், மனோகணேசனக்கு 6ஆசனங்களும், ரவூப் ஹக்கீமிற்கு 5ஆசனங்களும், ரிஷாத் பதியூதீனுக்கு 4ஆசனங்களும் உள்ளன. தமிழ் பேசும் தரப்பாக 25 ஆசனங்கள் காணப்படுகின்றன. நாம் இணைந்து செயற்படுவதென கொள்கை அளவில் இணக்கம் கண்டிருக்கின்றோம். ஆகவே, ஓர் ஆசனத்தைக் கொண்டிருக்கும் விக்கினேஸ்வரனும், இரு ஆசனங்களைக் கொண்டிருக்கும் கஜேந்திரகுமாரும் இந்த தரப்புடன் இணைந்து செயற்படுவதே பொருத்தமானது.

**கேள்வி:-** மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் இருக்கும் புதிய ஆட்சியாளர்களுடன் இனப்பிரச்சினை தீர்வு உள்ளிட்ட விடயங்களில் சாத்தியமான அணுகுமுறைகளைச் செய்ய முடியும் என்று கருதுகின்றீர்களா?

**பதில்:-** நாங்கள் அரசாங்கத்துடன் பேச்சுகளை மேற்கொள்வதற்குத் தயராகவே உள்ளோம். மேலதிகமான அணுகுமுறைகளையும் சரியான பாதையிலே செய்கின்றோம். இந்திய தரப்புடனான எமது முதற்சந்திப்பே அதற்கு உதாரணமாக இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை செய்யப் போவதில்லை என்று மார்தட்டிய ஆட்சியாளர்கள், இந்திய, இலங்கை ஒப்பந்தத்தில் தமிழர்கள் சார்பில் கையொப்பமிட்ட இந்தியத் தரப்பை சந்தித்து 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாக்குமாறு நாம் வலியுறுத்தியதை அடுத்து, தற்போது இந்தியாவுடன் பேசாதீர்கள், எம்முடன் பேசுங்கள் என்று கெஞ்சும் நிலைக்கு வந்து விட்டார்கள். எமது முதல் அழுத்தமே அவர்களின் எதேச்சதிகார நிலைப்பாட்டைத் தலைகீழாக மாற்றியுள்ளது. ஆகவே, கூட்டமைப்பின் நகர்வுகளை சரியாக அவதானிக்கின்றபோது எமக்கு ஆணை வழங்கிய மக்களும் நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

காலைக்கதிர் Kalaikkathir

# முன்னணியில் இருந்து மணிவண்ணன் நீக்கம்!

## கஜேந்திரகுமார் அதிரடி



(எஸ். நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 05

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்பினர் தகுதி நிலையிலிருந்தும் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று இதனைப் பகிரங்கமாக அறிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் இன்று பிற்பகல் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில்தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளிலிருந்து கட்சியின் மத்திய குழுவால் மணி வண்ணன் நீக்கப்பட்டார். பின்னர் அவர் பதிலளித்திருந்தார்.

அது தொடர்பில் மத்திய குழு மீளவும் கூடி மணிவண்ணனின் பதில் தொடர்பில் ஆராய்ந்தது. அவரது பதில்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தாக இருக்கவில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்பினர் தகுதி நிலையிலிருந்தும் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் இடைநிறுத்தப்பட்டுள்ளார். அது தொடர்பில் அவருக்கு இன்று காலை மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. அத்துடன், பதிவுத் தாபாலிலும் கடிதம் அனுப்பப்படும்.

மணிவண்ணனுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் அவர் தனது பக்க நியாயங்களைக் கட்சிக்கு அறிவிக்கவேண்டும். அதன்பின்னர் கட்சியால் அவர் மீது முன்வைக்கப்படும் 6 குற்றச்சாட்டுத் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும்.

எனவே தற்போது மணிவண்ணன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெயரைப் பயன்படுத்தி செயற்படமுடியாது என்று பொதுமக்களுக்கு அறிவிக்கின்றோம் - என்றார்.

### கஜேந்திரகுமாரின் கோரிக்கை

இதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர், ஊடக பேச்சாளர் எனச் சட்டத்தரணி வி.மணிவண்ணனை விளித்துச் செய்திகளை வெளியிடாதீர்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகவியலாளர்களிடம் வினயமாக கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மணிவண்ணன் கட்சியின் கொள்கையை மீறியதுடன் கட்சியின் தலைமைக்குச் சவால் விடும் வகையில் நடந்து கொண்டார். அதனால் அவர் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டார்.

அதனை நாம் கடிதம் மூலம் அறிவித் தோம். அதற்கு அவர் எழுத்து மூலமாகப் பதில் அனுப்பி இருந்தார். அதனை நாம் மத்திய குழுவில் ஆராய்ந்து அவரின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் கருத்தில் கொண்டு அவரை நாம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தியுள்ளோம். அது தொடர்பில் அவருக்கு அறிவித்துள்ளோம்.

இரண்டு கிழமைக்குள் அவர் பதில் அனுப்ப வேண்டும். உறுப்புரிமையிலிருந்து நிரந்தமாராக நீக்காது இருக்க அவர் பதில் அனுப்பவேண்டும். அதன் பின்னர் இரண்டு கிழமைக்குள் குழு அமைத்து விசாரணை முன்னெடுக்கப்படும். அந்த விசாரணையின் பின்னர் கட்சியின் உறுப் புரிமையில் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமா ? இல்லையா ? என தீர்மானிப்போம்

இந்த கால கட்டத்தில் பொதுமக்களுக்கு அறியத்தருவது யாதெனில், இன்று முதல் கட்சியின் செயற்பாட்டில் மணிவண்ணன் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது. கட்சியின் பெயர் அல்லது சின்னத்தைப் பயன்படுத்த தடை விதித்துள்ளோம். அவர் கட்சியின் பெயரில் செயற்பட்டால் அது கட்சி ரீதியானது அல்ல. அது கட்சியை மீறியது என அறிய தருகின்றோம்.

ஒழுங்காற்று விசாரணைகள் முடிந்த பின்னர் மேலதிக தகவல்களை அறிவிப் போம். உறுப்புரிமையில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார் என்பதனை மக்களுக்கும் , எமது ஆதரவாளர்களுக்கும் அறிவிக்கின்றோம். மணிவண்ணனின் கருத்துக்களோ செயற்பாடுகளோ கட்சியின் செயற்பாடாக இனிவரும் காலங்களில் அமையாது மணிவண்ணன் தொடர்பில் நாம் இவ்வளவு காலமும் அமைதி காத்தமையினால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெரும் பின்னடவை சந்தித்துள்ளது.

இனிவரும் காலங்களில் மணிவண்ணன் தான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர், தேசிய அமைப் பாளர் என ஊடகங்களில் பிரசுரிக்காதீர்கள். ஊடகவியலாளர்கள் செய்திகளில் பிரசுரிக்காமல் விட்டால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பாடாது. ஊடகவியலாளர்கள் நியாத்தின் பக்கம் நில்லுங்கள். மக்களுக்கு உண்மைகளை கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு உங்களிடம் உள்ளது - என்றார்.

இதனிடையே, தமிழ்த்தேசியமக்கள்முன்னணியில் சுமந்திரனை இணைத் தாலும் இணைக்கலாம். ஆனால் மணி வண்ணனை மீண்டும் இணைப்பது என்ற பேச்சிற்கே இடமில்லை என அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனை கட்சியின் பொறுப்புக்களில் இருந்து நீக்கிய நிலையில் முழுமையாக நீக்குவதற்கு முன்னர் கடந்த இரு நாட்களாக முன்னணியின் சகல உள்ளூராட்சிச் சபை உறுப் பினர்களையும் சபை ரீதியாக அழைத்து விடயத்தை தெரிவித்திருக்கிறார்.

கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள மணி வண்ணனுடன் தொடர்புகளைப் பேண வேண்டாம் எனவும், அவ்வாறு தொடர்புகள் நீடித்தால் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் கூறியுள்ளதோடு, அது என்ன நடவடிக்கை என்பதை மத்திய குழு தீர்மானிக்கும் என்றும், முன்னணியில் சுமந்திரனை இணைத்தாலும் இனி ஒருபோதும் மணிவண்ணனை இணைக்க முடியாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கான சந்திப்பின்போது ஒரு உறுப்பினரை விலக்கியே அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அறிவித்தல் வழங்கப்படாத உறுப்பினர் பணியாற்றும் நிறுவனத்தின் இயக்குநர் மேற்கொண்ட திட்டத்தில் இராணுவத்தினரும் நின்ற ஒரு புகைப் படத்தை அந்த உறுப்பினர் தனது முகப் புத்தகத்தில் பதிவிட்டமையே தவறாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று ஒரு தொண்டு நிறுவனத் துடன் இணைந்து பணியாற்றும் பிறிதொரு மாநகர சபை உறுப்பினர் கொரோனா காலத்தில் புரிந்த உதவியின் போது படை யினரும் அவருடன் புகைப்படத்தில் நிற்பதால் அவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை பாயும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ‘எம்.டி. நியூ டயமண்ட்’ கப்பல் பாதுகாப்பான கடல் பகுதிக்குள் இழுத்துச் செல்லப்பட்டது!

கொழும்பு, செப். 05

இலங்கையின் கிழக்குக் கடலில் தீப்பிடித்த நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்த பனாமா நாட்டுக்குச் சொந்தமான ‘எம்.டி. நியூ டயமண்ட்’ எண்ணெய்க் கப்பல் பாதுகாப்பாக சர்வதேச கடல் பகுதிக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கைத் துறைமுக ஆணையம், இந்தியக் கடற்படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படை ஆகியவற்றின் ஒன்றரை நாள் போராட்டத்தின் பலனாக ’எம்.டி. நியூ டயமண்ட்’ கப்பலில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும், தொடர்ந்தும் புகை வெளியாகிக் கொண்டிருப்பதால், உள்ளே மேலும் வெடிப்புகள் ஏற் பட்டால் கரையை அண்டிய பகுதிகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்ற காரணத்தால் குறித்த கப்பலை இலங்கை, இந்தியக் கடற்படையினர் சேர்ந்து சர்வதேச கடற்பரப்புக்குள் இழுத்துச் சென்றுள்ளனர்.

நங்கூரமிடப்படாத குறித்த கப்பல், இலங்கையின் கிழக்குக் கடலில் இருந்து 40 கடல் மைல் தொலைவிலிருந்த நிலையில் ஒன்றரை நாளில் இலங்கையை நோக்கி நகர்ந்து 25 கடல் மைல் தூரத்தை நெருங்கி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### எண்ணெய்க் கசிவு அச்சம்

2 இலட்சத்து 70 ஆயிரம் மெட்ரிக்தொன் மசகு எண்ணெய் கொள்கலன்களை ஏற்றியிருந்த கப்பலிலிருந்து எண்ணெய் கசிந்தால் கடல் வளங்கள் நாசமாகி, அந்தப் பகுதியில் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சமும் இருந்தது.

அப்படி நேர்ந்தால் கடலில் கசியக்கூடிய பெருமளவு எண்ணெய்யை அகற்றுவது என்பது சிக்கலும் சவாலும் செலவும் மிகுந்த காரியமாகிவிடும். ஆனால், தீ பரவல் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் கப்பலில் வெடிப்பு ஏற்படுவதற்கோ அல்லது எண் ணெய் கசிவதற்கோ வாய்ப்புகள் குறைவு என்று இலங்கை கடற்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி ரியர் அட்மிரால் வை.என். ஜயரத்ன ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

கப்பலின் பெரும் பகுதி நீர் மட்டத்திலிருந்து மிகவும் அடியில் இருப்பதால் மசகு எண்ணெய் களஞ்சியம் குளிர்ச்சியாகவே இருக்கும் என்றும், சமுத்திரத்தின் நீர் அழுத்தம் கப்பலில் வெடிப்புகள் ஏற்படாமல் தடுக்கும் என்றும் அவர் கூறினார்.

எனினும், எண்ணெய்க் கசிவு ஏற்பட்டால் கையாள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இலங்கைக் கடற்படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படையினர் முன்னெச்சரிக்கையாக உள்ளனர்.

எண்ணெய்க் கசிவின் பாதிப்பைக் குறைக்கக் கூடிய இரசாயனங்களைத் தெளிக்கும் திறன்கொண்ட சிறப்பு விமானம் ஒன்றையும் இந்திய அரசு மத்தல விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

தற்போது சர்வதேசக் கடலில் உள்ள கப்பல் ஆபத்து எதுவும் இல்லாமல் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன் அதன் உரிமையாளர் விரும்பும் இடத்துக்கு அதனைக் கொண்டுசெல்ல முடியும் என்று இலங்கை கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மேல் மாகாணத்தில் பொலிஸ் அதிரடி; 12 மணி நேரத்தில் 417 பேர் சிக்கினர்!

கொழும்பு, செப். 05

கொழும்பு , கம்பஹா உட்பட மேல் மாகாணத்தில் பல பிர தேசங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பில், பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 417 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரையில் இந்தச் சுற்றி வளைப்பு நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இதன்போது போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச் செயல்கள் தொடர்பாக 172 பேரும், நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த மற்றும் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 245 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கரித்தாஸ் கியூடெக் அமைப்பு ஏற்பாட்டில் கொரோனா விழிப்புணர்வுச் செயற்பாடுகள்




கரித்தாஸ் கியூடெக் அமைப்பின் யாழ் மாவட்ட இளைஞர் அணியினரால் யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு அண்மையில் முன்னெடுக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படத்தை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் பார்வைக்குத் தருகிறோம். பொதுமக்கள் மத்தியில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பாடசாலை மாணவர்களின் பங்கு பற்றுதலுடன் மூவினத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து யாழ்ப்பாணத்தின் பிரதான நகரங்களில் இந்த விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

**யாழ். ஆயருக்கு மகிழ்வைத் தெரிவிக்கும்**

## கொழும்பு புதிய துணை ஆயர்



*கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக யாழ் மண்ணின் மைந்தன் மேதகு அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் அடிகளார் கொழும்பு கொட்டகெனா புனித லூசியா பேராலயத்தில் 29 ஆகஸ்ற் 2020 அன்று திருநிலைப்பட்ட பின்னர் நடந்த கொண்டாட்டத்தின் போது புதிய ஆயர் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு கேக் தீத்தி மகிழும் அரிய படம் இதுவாகும்.*

# அன்பின் துளி அன்னை தெரேசாவின் 23ஆம் ஆண்டு நினைவு கூரப்பட்டது

அன்பின் கடிதத்தை இவ்வுலகத்திற்கு எழுதுகின்ற இறைவனின் கரங்களில் இருக்கும் சிறிய பென்சில் மட்டுமே நான் என தன்னைப் பற்றி சொன்னவர் புனித அன்னை தெரேசா.

இவர் இந்தியாவில் 45 ஆண்டுகளுக்கு மேலாக சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட நோயாளிகளுக்கு அன்புப் பணியாற்றி அன்னை எனும் சொல்லுக்கு முழு அர்த்தம் கொடுத்தவர். இந்த அன்னை இறைபதம் அடைந்த 23வது ஆண்டு (05 செப்டம்பர் 1997) நிறைவு நேற்று 05 செப்ரெம்பர் 2020 அன்று நினைவுரப்பட்து.

ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான எம்.ஜி.தேவசகாயம் அவர்கள் புனித அன்னை தெரேசா பற்றி 'அன்பின் துளி அன்னை தெரேசாவின் நினைவுகள்' என்ற தலைப்பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் அன்னை தெரேசா பற்றி நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

# 90 வயதிலும் இளமைத் துடிப்புடன் பணியாற்றும் லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளார்

அமலமரித்தியாகிகள் சபையின் மூத்த குருவான லூயிஸ் பொன்னையா அ.ம.தி. அடிகளார் ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி தனது 90 ஆவது அகவையில் கால் பதித்தார். 90 வயதைத் தொட்டும் தனது இதர பணிகள் மத்தியில் தனது கற்பித்தற் பணியையும் தனது துவிச்சக்கர வண்டிப் பவனியையும் விட்டு விடாத அடிகளாருக்கு காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

மெல்லிய உடல் அமைப்பில், விறுவிறுவென்ற வேகநடையில், கூர்ந்து கனிந்த பார்வையில், முகம் முழுவதும் மலர்ந்த புன்சிரிப்பில், கனிவான – கண்டிப்பான அணுகுமுறையிலும் நிர்வாகத்திறனிலும் நீங்கள் சாதித்தவை ஏராளம்.

லூயிஸ் பொன்னையா அ.ம.தி அடிகளார் என்ற தங்களின் தனி மனித ஆளுமைக்கு வடமாகாண அமலமரித்தியாகிகள் சபையில் என்றும் ஒரு தனி இடம் இருக்கும். இனிய மலேசிய உச்சரிப்புப் பேச்சில் நீங்கள் பேசினால் கேட்டுக் கொண்டே இருக்கலாம்.

பங்குத்தந்தையாக, மறையுரைஞராக, அமலரித்தியாகிகளின் முன்னைய உபமாகாண முதல்வராக, நிதியாளராக, குருமட விரிவுரையாளராக, ஆன்மீக வழிகாட்டியாக, அமல மரித்தியாகிகளின் துறவியாக எனப் பன்முக வடிவமெடுத்து ஒரு குருவின் வாழ்வை வாழ்ந்து காட்டியுள்ளீர்கள்.



பங்குத்தந்தையாக தாங்கள் பணியாற்றிய பங்குகளில் தங்கள் காட்டிய அன்பான அதேவேளை அதிகாரமிக்க நிர்வாகத் திறனை பாராட்டுவோர் இன்றும் உள்ளனர். தங்களிடம் மெய்இயல் கல்வி கற்றுக் குருக்களாகப் பல பணித்தளங்களில் பணியாற்றுவோர் தங்களின் அறிவையும் அனுபவத்தையும் ஆளுமையையும் ஆன்மீகத்தையும் இன்றும் வாழ்த்திக் கொண்டே இருக்கின்றனர் எனலாம். தங்களின் அருமையான விரிவுரைகளில் காணப்பட்ட தெளிவு மிளிர்ந்த சிறந்த உதாரணங்கள் எல்லாம் இவர்கள் மனதுகளில் நீண்டகாலம் பயணிககும் என்பதில் ஐயமில்லை.

எப்போதும் இளமையாக, எல்லாவற்றிலும் எளிமையாக, வெண்ணிற ஆடையில் எப்போதும் தூய்மையாக, 'ஓர் சைக்கிளும் ஒரு கறுத்த தொப்பியுமே என் சொத்து' என ஒரு துறவியின் வரைவிலக்கணங்களையும் வாழ்ந்து காட்டினீர்கள். தங்களின் விருப்பமான சைக்கிள் சவாரி தங்களுக்கு நோய் எதையும் பெரிதாக அண்ட விடவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. அளவோடு உண்டு வளமோடு வாழவேண்டும் என்பதற்கு தங்களின் என்றும் மாறாத உடல்வாகே உதாரணமாகும்.

தனியாக, துணிவாக உங்களுக்குச் சரி எனப்பட்டதை என்றும் சாதிக்கத் துணிந்தவர் நீங்கள். இறைவனோடு செபத்திலும் தபத்திலும் இணைந்திருப்பதே இன்பம் எனக்கருதியவர் நீங்கள். தங்களின் 50ஆவது குருத்துவ நிறைவு நாளில் இந்த 50 வருடங்களில் ஒரு நாள் மட்டுமே நோய் காரணமாகப் பூசை வைக்கவில்லை என்று வேதனையாகச் சொன்னீர்கள். இது தங்கள் கட்டுப்பாடான வாழ்வின் வெளிப்பாடு.

நால்வரைக் கத்தோலிக்கத் திருச்சபையில் பணியாற்ற அர்ப்பணம் செய்த குடும்பம் தங்கள் குடும்பம். நல்ல கத்தோலிக்க குடும்பங்கள் விசுவாசத்தின் விளைநிலங்கள் என்பதற்குத் தங்கள் குடும்பம் நல்ல உதாரணம் எனத்துணிந்து கூறலாம்.

கணீர் எண்ற குரலில், சத்தமாக, அழுத்தம் திருத்தமாக. சொற்களை உச்சரித்து கத்தோலிக்கத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஐயம் திரிபற வெட்டு ஒன்று துண்டு இரண்டாக வெளிச்சம் போட்டுக்காட்டியவர் நீங்கள். உங்கள் மறையுரைகளில் அன்றாடப் பேச்சுத்தமிழும் விவிலிய மேற்கோள்களும் சிறு கதைகளும் புகுந்து அழகுற மெருகேற்றும். யாருக்காகவும் சொல்ல வேண்டிய எதையும் சொல்லாமல் விட்டவர் அல்லர் நீங்கள். ஒவ்பீஸ் புத்தகத்துடன் குருக்கள் ஆலயத்தில் இருந்து செபிப்பதை மக்கள் காணவேண்டும் எனச் சொன்னவர் நீங்கள். மக்கள் திருந்த வேண்டும் என்ற விடாமுயற்சியுடன் நீங்கள் சொல்லும் மறைஞரைகளில் சிலவேளைகளில் அனல் பறக்கும். ஆவேசம் தெரியும். எதுவுமே நடைபெறாது என்று உணரும் தருணம் ஏற்படும்போது எனது கடமை–உரக்கச்சொல்லி விட்டேன் – என் பணி முடிந்நது என வீறு நடை போட்டவர் நீங்கள். யோசிக்க வேண்டாம். உங்கள் மறை யுரைகளை விரும்பிக் கேட்கவென்றே ஒரு மக்கள் கூட்டம் இன்றும் உள்ளது. காலம் மாறிக் கடமைகள் வேறுவடிவம் எடுத்தாலும் தங்கள் வாழ்வினதும் பணியினதும் தாக்கம் என்றும் இருக்கவே செய்யும். பொன்னையா அடிகளாரே உங்கள் வாழ்வு பொன் ஐயா!

அருள்திரு கலாநிதி ரூபன் மரியாம் பிள்ளை
(ஊடக வருகை விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)

காலைக்கதிர் Kalaikkathir

# புதிய அரசமைப்பு நிபுணர் குழாமில் மலையக பிரதிநிதியையும் நியமிக்குக!

## ஜனாதிபதியிடம் மனோ கோரிக்கை

கொழும்பு, செப்.06

புதிய அரசமைப்பு வரைவு நிபுணர்கள் குழுவில் மலையக தமிழ் பிரதிநிதி ஒருவரையும் நியமிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -



புதிய அரசமைப்பை வரைவதற்கான ஒரு குழுவை ஜனாதிபதி சட்டத்தரணி ரொமே டி சில்வா தலைமையில் நீங்கள் நியமித்துள்ளீர்கள்.

இதை நாங்கள் சாதகமாகவே பார்க்கிறோம். இதன் மூலம் இந்த நாட்டில் நிலவி வரும் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளுக்கான வழிகளை புதிய அரசமைப்பு ஏற்படுத்திட வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

இந்நிலையில் உங்களால் நியமிக்கப்பட்டுள்ள குழுவில், வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் மற்றும் முஸ்லிம் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனினும், இந்நாட்டில் வாழும் சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய பிரதிநிதி இடம்பெறாமை எமக்கு கவலை தருகிறது. இது தற்செயலாக ஏற்பட்ட இடைவெளி என நாம் கருதுகின்றோம்.

எனவே தங்களால் நியமிக்கப்பட்டுள்ள குழுவில், சமீபத்திய இந்திய வம்சாவளி மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்ய தகுதி வாய்ந்த ஒரு பிரதிநிதியை நியமிக்கும்படி வேண்டுகிறேன். நீங்கள் கேட்டுக்கொள்வீர்களாயின், தகுதி வாய்ந்த பிரதிநிதிகளின் பெயர்களைத் தங்கள் பரிசீலனைக்காக சிபாரிசு செய்யவும் நான் தயாராக இருக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். – என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# ஹெரோயினுடன் நான்கு பேர் கைது

பாணந்துறை பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் ஹெரோயினுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து பொலிஸார் 422 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளனர்.

அத்தோடு சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் இரத்த தானம்!



வவுனியா, செப்.06

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் குருதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இரத்ததான முகாம் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

நெளுக்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

நெளுக்குளம் இளைஞர்கள் மற்றும் பொது அமைப்பான அன்பாலயா அமைப்பின் ஊடாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இந்த இரத்ததான முகாமில் 30 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தலுக்காக வழங்கப்பட்ட காணியில் இராணுவத்தினர் முகாம்!

ஹட்டன் – கொட்டகல பகுதியில் அத்துமீறி காணி கையகப்படுத்தப்பட்டமை தொடர்பில் 50 கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பிரியங்கர பெர்னாண்டோ , 02 கேர்ணல்கள், மேஜர் ஒருவர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தலுக்காக வழங்கப்பட்ட காணியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளதாக காணி உரிமையாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணைக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு நீதிவான் அறிவித்தல் பிறப்பித்துள்ளார்.

# ஏற்றுமதி பொருளாதாரத்தை வெற்றிகொள்ளும் இலங்கை

## அமைச்சர் விமல் வீரவன்ஸ நம்பிக்கை

கொழும்பு, செப்.06

எதிர்காலத்தில் இறக்குமதிகளால் நிறைந்த நாடு என்பதற்கு அப்பால் ஏற்றுமதி பொருளாதாரத்தை வெற்றிக்கொண்ட நாடாக இலங்கையை மாற்றியமைக்க வேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளையும் மனித வளத்தையும் விருத்தி செய்வது உட்பட ஏனைய காரணிகள் தொடர்பாக அரசு கவனம் செலுத்தவுள்ளது.

– இவ்வாறு கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.



கைத்தொழில் அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்–

கொரோனாவுக்கு முன்னர் தேசிய ஆடை உற்பத்தியாளர்களுடன் நடத்திய சந்திப்பின் போது அவர்களது பிரச்சினைகள் பற்றி ஆழமாக ஆராயப்பட்டதுடன், அவர்களின் ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்குள்ள தடைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்காக 'சர்வதேச ரீதியான சாதாரண சந்தை வாய்ப்புக்கள்' என்ற தொனிப்பொருளில் இவர்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி தொடர்பான விழிப் புணர்களை ஏற்படுத்தத் திட்டமிட்டிருந்தோம்.

மக்களுடைய அரசு என்ற அடிப்படையில் மக்களுக்கான பணிகளைச் செய்வது எமது பொறுப்பு. அதன் பிரகாரம் தேசிய ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஆடை ஏற்றுமதி தொடர்பில் விளக்கமளிப்பது அமைச்சின் பொறுப்பாகும். ஏற்றுமதி சபை மற்றும் துறைசார் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இந்த நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வரு கின்றோம். தேசிய ஆடை உற்பத்தி தொடர்பில் எமது அரசு அதிகூடிய கவனத்தை செலுத்தியுள்ளது – என்றார்.

# கதிர்காமம் ரஜமகா விகாரைக்கு பிரதமர் நேரில் சென்று வழிபாடு!





கதிர்காமம் – கிரிவெகர ரஜமஹா விகாரையில் தாதுகோபுர வழிபாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டார்.

நேற்று (சனிக்கிழமை) ருஹுணு மாகம்பத்துவையின் தலைமை சங்கநாயக்கர், கதிர்காமம் சானாரக்ஷக சபையின் தலைவர், கிரிவெகர ரஜமஹா விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய கொபவக தம்மிந்த தேரரை சந்தித்த பிரதமர், அவரது நலன் விசாரித்து ஆசியும் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கதிர்காமம் ஆலய வளாகத்திற்கு வருகைத்தந்து, அடஎல போதியில் வழிபாடு நடத்தினார்.

இந்த மத வழிபாட்டில் கதிர்காமம் அபிநவாராமாதிபதி ருஹுணு மாகம் பத்துவே, சங்கநாயக்கர் கப்புகம சரணதிஸ்ஸ தேரர் மற்றும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, கதிர்காமம் பிரதேச சபை தலைவர் சானக அமில ரங்கன, ருஹுணுமகா கதிர்காம தேவாலயத்தின் பஸ் நாயக்க நிலமே தில்ருவண் ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 11 பேர் குணமடைவு!

நாட்டில்மேலும்11பேர்கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, வைரஸ் தொற்றிலிருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 918 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட மூவாயிரத்து 115 பேரில் இன்னும் 185 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன், கொரோனா தொற்று சந்தேகத்தின்பேரில் 41 பேர் வைத்தியக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 12 பேர் மரணித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை கடற்பகுதியில் எண்ணெய்க் கசிவு மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை!

சங்கமன்கந்தை கடற்பரப்பில் இருந்து 38 மைல் தொலைவில் பெரும் எண்ணெய் தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், அம்பாறை மாவட்ட மீனவர்கள் எவரும் மீன்பிடிப்பதற்கு கடலுக்கு செல்லவில்லை என எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தத் தீ விபத்தால் கடலில் கச்சா எண் ணெய் கசிவு ஏற்படாது என பல்வேறு தரப்பினரும் அறிவித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு, கல்முனை உள்ளிட்ட பகுதிகளில் என்ணெய் பரவல் அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இந்த எண்ணெய் பரவலானது விபத்திற்குள்ளன கப்பலின் எண்ணெய் கசிவா அல்லது வேறு படகில் இருந்து வெளியாகிய எண்ணெய் கசிவா என அறிய முடியவில்லை.





அத்துடன் இந்த விபத்து தொடர்பாக முன்னெச்சரிக்கை யாக இருக்குமாறு அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மாநகர சபைகளுக்கு அனர்த்த முகாமைத் துவ நிலையம் அறிவித்திருந்தது.

இதேவேளை கரையோர மீனவர்களும் மீன்பிடிப்பதற் காக கடலுக்கு இன்று செல்லவில்லை. இந்த எண்ணெய் பரவலின் எச்சங்கள் கடற்கரையோரங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், தாவரங்களில் தென்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

### கப்பலின் தீயை அணைக்க

## உயிரைப் பணயம் வைத்துப் போராடிய சகலருக்கும் கோட்டா நன்றி தெரிவிப்பு

கொழும்பு, செப்.06

பணாமாநாட்டுக்குச்சொந்தமானஎண்ணெய்க் கப்பல் இலங்கையின் கிழக்குக் கடற் பிராந்தி யத்தில் தீப்பிடித்திருந்த நிலையில் அந்தத் தீயை அணைக்க உயிரைப் பணயம் வைத்துப் போரா டிய அனை வருக்கும் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ நன்றி தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ 'ருவிட்டர்' மற்றும் 'பேஸ்புக்' பக்கங்க ளில் அவர் பதிவொன்றை இட் டுள்ளார்.

அந்தப் பதிவில், 'எம்.டி. நியூ டயமண்ட்' எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைக் கத் தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போரா டிய இலங்கை கடற்படை, இலங்கை விமானப் படை, இலங்கைத் துறைமுக அதிகார சபை மற்றும் இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றேன். கடல் பல்லு யிரியலைப் பாதுகாப் பதில் உங்கள் பணியை நான் பெரிதும் பாராட்டு கின்றேன் – என்றுள்ளது.

## மது போதையில் இடைஞ்சல்; இரு கான்ஸ்டபிள்கள் கைது!

மத்தேகொடை பொலிஸ் நிலை யத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ் டபிள்கள் இருவர், மது போதையில் முறையற்று நடந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு குறித்த இருவரும் பொலிஸ் விடுதியில் முறையற்று நடந்துகொண்டனர் எனவும் குற் றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த இரு பொலிஸ் கான்ட பிள்கள் மீது செய்யப்பட்ட முறைப் பாட்டைத் தொடர்ந்து அவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

மத்தேகொடவிலுள்ள ஹோட்ட லொன்றில் அவர்கள் இருவரும் மதுபானம் அருந்திவிட்டு, போதை யில் முறைகேடாக நடந்துகொண்டு இடைஞ்சல் விளைவித்த குற்றச் சாட்டில் அவர்கள் கைதுசெய்யப் பட்டனர்.

குறித்த இரு பொலிஸ் கான்ஸ்ட பிள்களையும் பணி இடைநீக்கம் செய்வதற்கான விசாரணைகள், கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகரின் உத்தரவின் பேரில் கல்கிஸை உதவி பொலிஸ் அத்தி யட்சகரினால் முன்னெடுக்கப்பட் டுள்ளன.




லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
இல - 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1993 - 12 - 17 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 18 செவ் - சூரி 10இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor Australia PR
எதிர்பார்ப்பு - Doctor, Engineer இலங்கை/ Australia மணமகன் தேவை.

பிறந்த திகதி - 28.02.1978 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 15 செவ் - 2 இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - Canada PR
எதிர்பார்ப்பு - Canada செல்ல விரும்புபவர்கள் படித்தவர்கள்.

பிறந்த திகதி - 27.02.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி (2)
கி.பா - 23 செவ் - 3 இல்
தகைமை - B.S.C M.S.C தொழில் -Australia Work Parmit
எதிர்பார்ப்பு - Australia PR பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 1992.02.25 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - அனுசம் (1)
கி.பா - 25 செவ் - 2 இல்
தகைமை - B.S.C தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி - 24.07.1990 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 9 செவ் - 6 இல்
தகைமை - Eye Doctor தொழில் - Eye Doctor Australia
எதிர்பார்ப்பு - Doctor, engineer மணமகன் இலங்கை / Australia

பிறந்த திகதி - 11.06.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி (3) 5' 6"
கி.பா - 44 செவ் - 6 இல்
தகைமை -B.S.C தொழில் - U.k P.R
எதிர்பார்ப்பு - U.k இலங்கை பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 28.09.1989 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 28 செவ் - சூரி 9 இல்
தகைமை -PHAMISTE தொழில் - CANADA PR
எதிர்பார்ப்பு - CANADA, இலங்கை மணமகன்

பிறந்த திகதி - 03.09.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் (4)
கி.பா - 20 செவ் - 12 இல்
தகைமை -M.B.B.S தொழில் - DOCTOR
எதிர்பார்ப்பு - DOCTOR மணமகன் மட்டும்

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 21.06.1986 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை 5' 4"
கி.பா - 36 செவ் - 11 இல்
தகைமை - Tek இல் Drassmen தொழில் - தொழில் நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 27.11.1988 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரோகிணி
கி.பா - 24 செவ் - 12 இல்
தகைமை - civil Engineer தொழில் - civil Engineer
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள், தீவு வேண்டாம்

பிறந்த திகதி - 03.10.1984 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் (2) 5' 8"
கி.பா - 48 செவ் - 1இல்
தகைமை - கல்வியல் கல்லூரி தொழில் - ஆங்கில ஆசிரியர், கொழும்பு
எதிர்பார்ப்பு - அரச சேவை கொழும்பில் மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1987.01.03 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 4
கி.பா - 11 செவ் - 9இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - France PR
எதிர்பார்ப்பு -A/L படித்த மணமகள் இலங்கை/ France

பிறந்த திகதி - 1983.07.18 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சுவாதி (3)
கி.பா - 50 செவ் - 9இல்
தகைமை - B.A தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி - 1981.05.24 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் (3)
கி.பா - 26 செவ் - 2இல்
தகைமை - B.S.C தொழில் - U.K. PR
எதிர்பார்ப்பு - பட்டதாரி U.K, இலங்கை மணமகள்.

பிறந்த திகதி - 1987.02.28 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரட்டாதி (2), கும்பம்
கி.பா - 38 செவ் - 7 இல்
தகைமை - B.A. Hons தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்.

பிறந்த திகதி - 1987.07.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் (4) 6'
கி.பா - 26 செவ் - சூரி 1 இல்
தகைமை - B.S.C தொழில் - U.S.A. PR
எதிர்பார்ப்பு - இலங்கை வந்து திருமணம் செய்வார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொ.பே. 077 197 1667
077 3164 796

## 'மொட்டு' – 'கை' கூட்டு கேள்விக்குறி

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடனான கூட்டணி குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீள் பரிசீலனை செய்யலாம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்ன ணியின் ஆலோசகரும் முன்னாள் பொதுச் செய லாளருமான பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:–

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு தனது பங்காளிக் கட்சிகளுடன் கலந் தாலோ சிக்காமல் பல தன்னிச்சையான தீர்மானங்கள் எடுத்துள்ளது.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் சுதந் திரக் கட்சியின் பல உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். அவர்கள் பொதுஜன முன்னணி யின் ஒட்டு மொத்த வெற்றிக்கும் பங்களிப்பு செய்தனர். எனி னும், சுதந்திரக் கட்சிக்குப் போதுமான தேசியப்பட் டியல் ஆசனங்கள் வழங்கப்படவில்லை.

பங்காளிக் கட்சிகளுடன் கலந்தா லோசனை செய்யாமல் அரசால் தேசியப்பட்டியல் ஆச னங்கள் தீர்மானிக்கப்பட்டன. பொதுத்தேர்த லின் பின்னர் நியமனங்கள் வழங்கப்பட்ட வேளை பல பங்காளிக் கட்சிகள் புறக்கணிக் கப்பட்டன. சுதந்திரக் கட்சியுடன் செய்துகொள்ளப் பட்ட உடன் படிக்கைகளைப் பொதுஜன முன் னணி தொடர்ந் தும் புறக்கணித்தால் கூட்டணி யைத் தொடர்வதா எனச் சிந்திக்க வேண்டியிருக்கும் – என்றார்.

## மணிவண்ணனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிவண்ணனை அமைப்பில் இருந்து நீக்கு வதாக அண்மையில் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் அறிவித்திருந்தார். ஆயினும் தானே அமைப்பின் தேசிய அமைப்பாளராகத் தொடர்ந் தும் செயற்படுவேன் என்று மணிவண்ணன் கூறி னார்.

இதனை அடுத்து கட்சி உறுப்புரிமையில் இருந்து மணிவண்ணன் நீக்கப்பட்டுள்ளார் என கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

இந்நிலையில் மணிவண்ணனைத் தலைமை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்ற அமைப்பு ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் இளைஞர் அமைப்பாகச் செயற்படும் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் யாழ்.மாநகர சபை உறுப் பினர் பார்த்தீபன் உட்பட பல மாநகர, நகர, பிர தேச சபை உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் இளைஞர்களும் இணைந் துள்ளனர் என அறிய முடிகிறது.

# கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளருடன் நெல்லியடி ஓட்டோ ஓட்டுநர்கள் முரண்பாடு



நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்னால் நிற்கும் ஓட்டோ ஓட்டுநர்களுக்கும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளருக்கும் இடையில் நேற்று முறுகல் நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

"இரண்டு தசாப்தத்துக்கு மேலாக நெல்லியடி பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஓட்டோ தரிப்பிடம் இருந்து வருகின்றது. கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஓட்டோத் தரிப்பிடத்திற்கு இவ்விடம் இல்லை, உடனடியாக இடத்திலிருந்து ஓட்டோக்களை அகற்றுமாறு கூறுகிறார். அதனால் தான் பிரச்சினை. நாங்கள் மொத்தமாக 45 ஓட்டோக்கள் இவ் இடத்தில் இருந்துதான் இயங்குகிறோம். எங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றோம்." நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்னால் நிற்கும் ஓட்டோ ஓட்டுநர்கள் தெரிவிக்கின்றனர்.

"இதேவேளை பஸ் நிலையத்தின் முன்னால் இரு ஓட்டோக்கள் நிறுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்து தருமாறு பிரதேசசபை நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டோம். ஆனால் தவிசாளர் மலசலகூடம் இருக்கும் பக்கம் ஓட்டோக்களை நிறுத்துமாறு வற்புறுத்துகிறார். ஆட்டோக்கள் மலசலகூட பக்கம் நிறுத்த முடியாத நிலைமையில் சுகாதார சீர்கேடு. தூர்நாற்றம் வீசுகின்றது." - என்றும் அவர் கூறுகின்றார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் உடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தான் சட்டப்படி நடக்கிறார் என அவர் கூறுகிறார்.

அவர்கள் மீது பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமையால் கரவெட்டி பிரதேச செயலர், நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை நிர்வாகம் ஆகிய தரப்புகள் சேர்ந்துதான் இந்த முடிவை எடுத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# குளியாப்பிட்டிய சிறையிலிருந்து கைதிகள் நால்வர் தப்பி ஓட்டம்!

கொழும்பு, செப். 06

குளியாப்பிட்டிய சிறைக்கூடத்திலிருந்து 4 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே இவ்வாறு தப்பியோடியுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு சிறைக்கூடத்தின் கூரையிலிருந்த ஓடுகளைக் கழற்றி அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என நிர்வாக ஆணையாளர் கூறினார்.

எவ்வாறாயினும், தப்பிச்சென்ற கைதிகளில் ஒருவர் வாரியபொல சிறைச்சாலையில் சரணடைந்துள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார்.

வாரியபொல சிறைச்சாலையினால் குளியாப்பிட்டிய சிறைக்கூடம் தற்போது கைதிகளின் தனிமைப்படுத்தல் நிலையமாக பயன்படுத்தப்படுகின்றது.

இந்த நிலையில், தப்பிச்சென்றுள்ள கைதிகள் தொடர்பில் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க கூறினார்.

இவர்கள் குளியாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# படுதோல்விக்கு மத்தியில் இன்று 75ஆவது ஆண்டில் ஐ.தே.கட்சி!



இலங்கையில் மூன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் மற்றும் 7 பிரதமர்களை உருவாக்கிய பழமையான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இன்று 74ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவுள்ளது. இதற்காக சிறிகொத்தவில் சர்வமத வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

1994 ஆம் ஆண்டு முதல் 26 வருடங்களாக ஐ.தே.கவின் தலைவராக செயற்படும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின்கீழ்தான் 75ஆவது ஆண்டிலும் அக்கட்சி காலடிவைக்கின்றது. எனினும், இம்முறை தலைமைப்பதவியில் மாற்றம் ஏற்படுவது உறுதியென ஐ.தே.க. உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

1946 ஆம் ஆண்டு டி.எஸ். சேனாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியானது 1947 முதல் 2020 வரை இலங்கையில் நடைபெற்றுள்ள 16 நாடாளுமன்றத் தேர்தல்களில் 8 இல் வெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ளது. அத்துடன், 8 ஜனாதிபதி தேர்தல்களில் மூன்றில் வெற்றிவாகை சூடியுள்ளது.

எனினும், நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வரலாறுகாணாத பின்னடைவு ஏற்பட்டது. மாவட்ட ரீதியாக ஓர் உறுப்பினர் கூட தெரிவாகவில்லை. தேசியப்பட்டியல் ஊடாகவே ஓர் ஆசனம் கிடைக்கப்பெற்றது. அந்த ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பிலும் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனால் 73 ஆண்டுகளுக்கு பிறகு ஐக்கிய தேசியக் கட்சியில் பங்குபற்றல் இல்லாமல் நாடாளுமன்றம் கூடிய வரலாற்று சம்பவமும் கடந்த 20ஆம் திகதி பதிவானது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2020 இல் வெளியிடப்பெற்றது.